# சிதம்பர கீதம்

( 116, இனிய தமிழ்க் கீர்த்தனைகள் )

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

அன்பு நிலையம்
இராமச்சந்திரபுரம் :: திருச்சி ஜில்லா

பதிப்புரிமை

முதற் பதிப்பு : 1943

இரண்டாம் பதிப்பு : 1945

விலை ரூ. 1-4-0

சக்தி பிரஸ் லிமிடெட், (சாந்தி பிரஸ்), சென்னை

# பதிப்புரை

சிதம்பர கீதத்தின் இரண்டாம் பதிப்பை, எம்மையாளு டைய சிற்சபேசன் திருவடியில் வைத்து வணங்குகிறோம். இன்று தமிழ் நாடு, இக்கீர்த்தனங்களின் பெருமையைக் கொண்டாடுகிறது. பல கச்சேரிகளிலும், ரேடியோவிலும், கிராமபோனிலும் இக்கீதங்கள் முழங்குகின்றன. இக் கீதங்களில் அறுபது உருப்படிகளைத் தேர்ந்து ஸ்வரத்துடன் அச்சிட்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் இசைக் கல்லூரியில் பாடம் வைத்திருக்கிறார்கள்; மற்றவையும் ஸ்வரத்துடன் வரும். கழகப் புல்வருக்கு எமது நன்றி யாகுக!

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள், எல்லாச் சமயங்களையும், யோகமார்க்கங்களையும், கற்றுத் தேர்ந்தவர்; வேதாந்த சித்தாந்தப் பொருளுணர்ந்த அருந் தவசித்தர்; நடராஜாவைத் தமது உபாசனா மூர்த்தியாகக் கொண்டவர். அவர் தமது தியானோபாசனைக்காகவே இக் கீர்த்தனங்களைப் பாடினார். ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவருட் சக்தியை உபாசிக்கும் இந்த அருட்பாடல்கள், அவனுக்கே நிவேதனமாகுக!

ஓம் சிவம்

இராமச்சந்திரபுரம்
15—3—1945

**அன்பு நிலயத்தார்.**

ருக–(கரு)–உ-க000

உ

THE MADURA TAMIL SANGAM

# சிதம்பர கீதம்

காப்பு

## திருத்தாண்டகம்

விள்ளரிய சுகானந்த வெள்ளந் தன்னில்
விளைந்தபரங் கனியே, என் விருப்பை நாளும்
கொள்ளைகொளும் அருட்சோதிக் குன்றே, தன்னைக்
கொடுத்தடியார் குறைதீர்க்குந் துரையே, நாளும்
உள்ளத்தி லோங்காரச் சிலம்பொ லிக்க
ஓங்குநடம் புரிகின்ற சிவமே, யுன்னைத்
தெள்ளினிய செந்தமிழால் வழிபட் டுய்யச்
சிறியேனுக் கருள்புரிவாய் பெரிய தேவே!

— சு. பா.

# 1. அன்பான நெஞ்சிலே

[இராகமாலிகை]

அன்பான நெஞ்சிலே, அருளான சாட்சியாய்
ஆனந்த நடன மிடுவாய்,
ஹரஹர சிவாயநம வெனும்அடியர் வாக்கிலிசை
அருவியென வே பெருகுவாய்!

உன்பாத மலரன்றி வேறொன்று மறிகிலேன்;
ஒருமையுடன் உன் பெருமையை
உயர்வான தமிழ்பாடி, உலகெலாம் புகழுவே
ஓதநான் காதல் கொண்டேன்!

என்பால் இரங்கியருள், இரவுபகல் இல்லாமல்
இதயகுகை ஒளிர் இரவியே,
எண்ணியதை 'இந்தா' வெனத்தருந் தந்தையே,
எனையூட்டி வளர் அன்னையே!

இன்பான ஜோதியே, ஏகாந்த மோனத்தில்
இனிதுவரும் அனு பூதியே!
இதந்தரு சுதந்தர பதந்தரு திகம்பர
சிதம்பர பரம் பிரமமே!

# 2. நடராஜா சரணம்

தோடி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

நடராஜா சரணம் - எனதுகுரு
நாதா உன் சரணம் (நட)

அநுபல்லவி

சுடரோங் கியபரஞ் ஜோதிப் பொருளே - சக்தி
சுந்தரி யுடன் உன்னைச்
சந்ததம் சிந்தித்தேன் (நட)

சரணம்

சித்த சுத்தியுடனே சிற்சபை யிலே கூடி,
தியானத்திலே லயித்த ஞானத்துடனே பாடி,
பக்திப் பரவசத்தில் 'தத்திமி' என்ருடி,
பரமா னந்தம்பெறும் வரமே நாடினேன்;
பரிந்தருள் புரிந்தெனுள்
நிரந்தரம் இருந்தருள் (நட)

## 3. ஜங்கார சுருதி

பூர்வ கல்யாணி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

ஜங்கார சுருதி செய்குவாய் - ஜீவ வீணையில்
சங்கீதா மிர்தம் பெய்குவாய் - ஜகதீஸ்வரனே (ஜங்)

அநுபல்லவி

சங்கர சாம்ப சதாசிவ ஓம்ஹர
சப்பு வெனச்சொல்லியென் ஜன்மங் கடைத்தேறவே (ஜங்)

சரணம்

பல பல வெனுங் காலை பாடும்புள் ளோசை போலும்,
பாற்கடல் உளம் விம்மி ஆர்க்கும் கர்ஜனை போலும்,
மலர்களைக் கொஞ்சி வரும் மந்த மாருதம் போலும்,
மதுவுண்ட வண்டினம் வளர்க்கும் ரீங்காரம்போலும்(ஜங்)

துரிதம்

தடதட வெனப்பொழி சப்த மேகங்கள் போலும்,
மடமட வெனவரும் மலையரு வியைப் போலும்,
கடகட வெனச்செல்லும் ககன லோகங்கள் போலும்,
நடமிடும் சிலம்புடன் நர்த்தனம் செய்ய நானும் (ஜங்)

## 4. அருவியைப் போலும்

அசாவேரி ராகம்] [சாபு தாளம்

பல்லவி

அருவியைப் போலும் காலைக் குருவியைப் போலுமுன்
அருளைநான் பாடுகின்றேன் (அரு)

அநுபல்லவி

தெருவில் இருந்து ஜய பேரி முழங்கவில்லை ;
திசையெல்லாம் புகழ் பெறும்
நசையும் எனக்கில்லை (அரு)

சரணம்

காற்றிலும், கதிரிலும், கடலிலும் உன்கலைக்
காட்சிகள் காட்டுகின்றாய் ;
ஊற்றியென் உள்ளத்தில் உன்னிசை யமுதினை
உயிரின்பம் ஊட்டுகின்றாய் ;
போற்றினும், உலகென்னைத் தூற்றினும், உன்புகழ்
போற்றாதிருக்க வியலேன் ;
ஆற்றுவ தெல்லாமுன் ஆராதனை யன்றி
ஆடம்ப ரமும் அறியேன். (அரு)

அன்பு மலர்களெல்லாம் உன் பாதம் வைத்திட்டேன் ;
அரனே,—என் குரு
பரனே,—உனது சரண் (அரு)

## 5. ஆசை கொண்டேன் வண்டே

அரிகேதார கௌளம்] [திரிபுடை தாளம்

பல்லவி

ஆசை கொண்டேன் வண்டே - உன்னுடனே நான்
ஈசன் புகழ் பாடவே (ஆசை)

அநுபல்லவி

வாச மலரடித்தேன் வாரி வாரியுண்டு,
வலம் வந்து, வலம் வந்து,
நலம்பெற வேதினம் (ஆசை)

சரணம்

வானச் சுடர் மணியே, ஞானக் கண் மணியே,
வசந்த மலரழகே, வன்னக் குயிலிசையே,
மோன மலையருவி கானம் செய்யும் வேதமே,
முத்தொழில் புரிந்திடும் சித்தனே யென்றோத (ஆசை)

## 6. மோன நிசியினிலே

நீலாம்புரி ராகம்] [தேசாதி தாளம்

பல்லவி

மோன நிசியினிலே கானம் செய்வது நீயோ? (மோன)

அநுபல்லவி

நானறத் தானென் றெழும்
ஞானப் பரம் பொருளே (மோன)

சரணம்

ஆணவப் பேய்மனம் அடங்கி யுறங்கும் வேளை,
அஞ்ஞான பந்தமின்றி அமைதி சிறந்த வேளை,
வீணையும் குழலும்போல் வேதமந் திரமும்போல்,
விரும்பியென் உள்ளத்தில்
கரும்பின் அருவியைப்போல் (மோன)

## 7. பரிபூர ணானந்தமே

பியாகு ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

பரிபூர ணானந்தமே—ஓம்
பரப்ரஹ்மமே நம (பரி)

அநுபல்லவி

விரிவான பார் எங்கும் விளங்கும் அருட்சுடரே,
பிரியாதென் உள்ளத்தில், அரியாசனம் வகிக்கும் (பரி)

சரணம்

சாதி சமயநிறப் பேதங் கடந்தொளிரும்
ஆதியந்த மில்லாத ஆத்ம ஸ்வரூபமே (பரி)

நாமரூ பாதீத மானநிர்க் குணமே
ஓம்தத்ஸத் என வேதம் ஓதிடும் சகுணமே (பரி)

## 8. இல்லையென்பான் யாரடா?

மோகன ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

இல்லையென்பான் யாரடா? - என் அப்பனைத்
தில்லையிலே பாரடா! (இல்லை)

அநுபல்லவி

கல்லும் கசிந்துருகக் கனிந்த முறுவலுடன்
காட்சி யளிக்கும் அந்தக்
கருணைச் சுடரொளியை (இல்லை)

சரணம்

சோக மோகமற்ற சுதந்தர வீரர்கள்,
சுத்த சிவத்தில்மனம் வைத்த ஞான தீரர்கள்,
தாகந் தணிந்தஉப சாந்த பராயணர்,
சந்ததம் இதயத்தில் வந்திக்கும் கடவுளை (இல்லை)

கல்லைக் கனியாக்க வல்ல புலவனைக்
கலைவடி வாகியென் கண்ணுள கண்ணனை,
எல்லா வுலகினுக்கும் இறைவனை, அன்பரின்
இதயத்தில் நடமாடும் சிதம்பர நாதனை (இல்லை)

## 9. சிதம்பரமென நினைவாய்

பங்காளா ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

சிதம்பர மென நினைவாய் மனமே,
சிதம்பரமென நினைவாய்! (சிதம்)

அநுபல்லவி

மதங்கொண் டலையும் மனதும் தெளியும்
இதய மலரில் அமுதம் பொழியும் (சிதம்)

சரணம்

பவகாம நாசன், சிவகாமி நேசன்,
பரிசுத்த பக்தர் தரிசிக்கும் ஈசன்,
தவமோங்கும் தில்லைக் கனக சபேசன்,
நவரச கலா நடராஜன் வாழும் (சிதம்)

## 10. தூக்கிய திருவடி

சங்கராபரண ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

தூக்கிய திருவடி துணையென நம்பினேன்,
துரிய நடராஜனே ! (தூக்)

அநுபல்லவி

ஆக்கி யளித்துலகை நீக்கி மறைத் தருளி,
ஐந்தொழில் புரிந்திடும் அம்பல வாணனே (தூக்)

சரணம்

எத்தனை யோபிறவி எடுத்தெடுத் தேயிளைத்தேன் ;
இருவினைப் பயன்களை எய்தி யெய்திக் களைத்தேன் ;
சித்தம் இனியுன்மேல் வைத்திருக்க நினைத்தேன் ;
திக்குவே றில்லை ஐயா, தீனரைக் காக்கும் கையா ! (தூ)

பாசம் அறுத்துச்சிவ
நேசம் கொடுத்துனது
தாசனைச் சிதம்பர
வாசனைய் வாழச்செய் (தூக்)

## 11. இதய வெளியினிலே

காம்போதி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

இதய வெளியினிலே, பொதுநடம் புரிகுவாய்
ஏகாம்பரனே - சிவனே - என் (இத)

அநுபல்லவி

பதசாரி தோறும்உன் அதிர்சிலம் பொலி கேட்டுப்
பரமா னந்தம் பெறுவேன் - சிற்ச பேசா - என் (இத)

சரணம்

எனதென் றகங்கரிக்கும் மனது பணிந்து வர,
இருவினைக் கட்டுகள் இற்றுச் சுயேச்சை பெற,
அனவர தமும்உன்னை நினைந்து கசிந்துருகி,
அத்தா வுன் மலரடிப் பித்தனாய் வாழ்ந்திட (இத)

ஹரஹர ஹர' என்றென் ஆர்வங்கள் கோஷிக்க,
அன்பு மகரவீணை 'தும்தும்' என வாசிக்க,
சிரசிலுன் பேரின்பம் சிலிர்த்து நடமாட,
செந்தமிழ் வாணியுன் - மந்திரப் பொருள்பாட (இத)

## 12. அப்பாவுன் பொன்னடி

செஞ்சுருட்டி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

அப்பாவுன் பொன்னடி துறப்பேனே?—நிதம்
அன்பு மலர்சொரிய மறப்பேனே?—தில்லை (அப்பா)

அநுபல்லவி

அப்பாலுக் கப்பாலாம் அறிவுநிலை வந்தாலும்,
அத்வைத சொரூபத்தில் ஆருயிர் கலந்தாலும் (அப்பா)

சரணம்

நீயின்றி எனக்கொரு நிலையுண்டோ?—நல்ல
நீரின்றி மீனுக்கு வாழ்வுண்டோ?
தாயின்றிச் சேய்க்கொரு கதியுண்டோ?—உன்
தயவின்றி யெனக்கொரு மதியுண்டோ?—தில்லை (அப்)

காட்டுகின்றாய், உன்னைக் காண்கின்றேன்—எங்கும்
கருணையுடன் அன்பரைக் காக்கின்றாய்—ஐயா
ஆட்டுகின்றாய், அதனால் ஆடுகின்றேன்—உலகில்
அருளுகின்றாய், அருளைப் பாடுகின்றேன்-தில்லை (அப்பா)

## 13. சாந்தமாகவுன் சந்நிதி

மாஞ்சை ராகம்] [சாபு தாளம்

பல்லவி

சாந்த மாகவுன் சந்நிதி யிலிருந்தே
தியானம் செய்வதே பர மானந்தம்...அப்பா (சாந்த)

அநுபல்லவி

காந்தம்போல் என்மனம் கவர்ந்தவுன் ஜோதியைக்
கருத்தில் இருத்தியெந்தக் கவலையும் இல்லாமல் (சாந்த)

சரணம்

யானென் றகங்கரிக்கும் ஆணவம் கிளம்பாமல்,
ஆசா பாசத்தால் மனம் ஊசலிட் டலேயாமல்...
மோனத்தி லேபூத்த ஞானத் தாமரைபோலே
முற்றுமுன் சேவடிப் பற்றுடனே நிதம் (சாந்த)

## 14. பக்தி மின்சாரம் அருள்

சலநாட ராகம்] [தேசாதி தாளம்

பல்லவி

பக்தி மின்சாரம் அருள்வாய்—பரமாத்மனே
பக்தி மின்சாரம் அருள்வாய்... (பக்தி)

அநுபல்லவி

சக்தியை ஆதாரச் சக்கரத்தில் ஏற்றி,
ஸஹஸ்ரார சித்தியால் சச்சிதா னந்தம் பெறும் (பக்தி)

சரணம்

சித்த சுத்தியுடனே தியானத்திற் கூட்டித்
தீயெழும் ஆத்மவி வேகத்தை நாட்டி...
எத்திசை யிலும்உன்னை எழில்பெறக் காட்டி,
எப்போதும் என்னுள்ளுன் இன்பத்தை ஊட்டிப் பர (பக்தி)

முக்குண வினையிருள் முற்றிலும் விலகிட...
மூல குண்டலிக் கனல் மூண்டென்னுள் இலகிட...
பக்குவக் கனிபோலென் பாமலர் பழுத்திட,
பாரெலாஞ் சின்மயம் பார்த்துளஞ் சிலிர்த்திட (பக்தி)

## 15. ஞானப்பால் அருள்வாய்

ஸாரமதி ரரகம்] [ஆதி தாளம்

பல்லவி

ஞானப்பால் அருள்வாய், சிவனே—யெந்த
நாளும் உன் இன்பத்தில் மூழ்கித் திளைத்திடவே (ஞான)

அநுபல்லவி

தேனும் பாலும் அமுதும் தீங்கனி ரசமும்போல்...
தியானத்தில் உன்னைக் கூடும்
மோன முனிவர் உண்ணும் (ஞான)

சரணம்

இம்மை மறுமைப்பயன் எல்லாமும் நீயென்றே
இதயத்தில் உன் அன்பை
எப்போதும் வளர்க்கின்றேன்...
'அம்மை யப்பா' வென்றே அழுதுன்னைக் கூவிய
ஆளுடைப் பிள்ளைக்குநீ அன்புடன் புகட்டிய (ஞான)

## 16. ஸ்ரீரங்க ராஜா

இராகமாலிகை] [சாபு தாளம்

பல்லவி

(கேதார கௌளம்)

ஸ்ரீரங்க ராஜா ஸ்ரீரங்க ராஜா-வுன்
சேவா னந்தமே பர மானந்தமே-அப்பா (ஸ்ரீரங்க)

அநுபல்லவி

ஆரணப் பொருளெல்லாம் அடங்கிய உருவமாய்
ஆளவந்தார் கண்ட அரவணைச் செல்வமே (ஸ்ரீரங்க)

சரணம்

(தோடி)

சக்தி வரலக்ஷ்மி ஜயமார்பிலே துலங்க,
ஜகன்மாதா உன்னடித் தாமரையில் விளங்க,
பக்தி ஹ்ருதய மான பாற்கடல் மீதிலே
பரம குண்டலி மேலே துரியத் துயில் வளரும்
(ஸ்ரீரங்க)

ஸ்ரீரங்க ராஜா

சரணம்

(அடாணா)

உலகைத் துரும்பென வுன்னைக் கரும்பென
உருகி யுருகி யன்பு பெருகிப் பதமடைந்த
குலசேக ரப்பெருமாள் கொண்ட பக்திப்ரஸாதம்
கொடுத்தென்னை ரக்ஷிக்கப்
பிடித்தேனுன் பொன்னடி (ஸ்ரீரங்க)

(கானடா)

காமஜப மொழித்துன் நாமஜப மருளாய்,
கள்ளநீலன் மனத்தைக் கொள்ளைகொண்ட வள்ளலே!
'ஓம் நமோ நாராயணாயஓம் ஹரி' யென்றே
ஓதும் அன்பருக்கனு பூதி தரும் அரசே (ஸ்ரீரங்க)

## 17. நம்பித்தான் இருக்கின்றேன்

மாளவி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

நம்பித்தான் இருக்கின்றேன்—என்னப்பனே
ஞான நட ராஜனே, உன்னருளையே (நம்பி)

அநுபல்லவி

அம்பலத் தாடும் அரசே...உன் பெருமையை
அல்லும் பகலும் அன்பாய்ச்
சொல்லிச் சொல்லி யுருகி (நம்பி)

சரணம்

ஆணவ மாயவினை அருகி, மனக் கல் உருகி,
மாணிக்க வாசகர் போல்—உன்
மங்களச் சோதியில்
மறைந்து கரைந்து போக (நம்பி)

## 18. எட்டி நிற்பதும் ஏனையா?

நாதநாமக்கிரியை] [சாபு தாளம்

பல்லவி

எட்டி நிற்பதும் ஏனையா?—நடராஜா
ஏழையின் பிழை யாதையா? (எட்டி)

அநுபல்லவி

கட்டிக் கரும்பினும், கனிரசப் பாகினும்,
கருத்திற் கினியமுக் கண்ணா...அந்தி வண்ணா (எட்டி)

சரணம்

தொட்டுக் கலந்துங்கை விட்டு வெறுப்பாயோ?
துணையென நம்பிய தொண்டரை மறுப்பாயோ?
சட்டப்படி மணந்த சக்தி சிவகாமியும்
சக்களத்தி யென்றே சண்டைக்கு வரவில்லை (எட்டி)

அன்றென்னை அழைத்துநீ ஆசையுடன் பேசி,
அள்ளிக் கலந்தேகளி துள்ளிக் குதித்தாயே;
இன்றென் முகம்பாராமல் இருப்பதும் நீதியோ...?
இரக்கமே வடிவாகும் அருட்பெருஞ் ஜோதியே
(எட்டி)

## 19. கொண்டி சொன்னதாரையா?

சக்ரவாக ராகம்] [சாபு தாளம்

பல்லவி

கொண்டி சொன்ன தாரையா?—உனக்கென்மேல்
கோபம் வந்த தேனையா? (கொண்)

அநுபல்லவி

தொண்டர் வணங்குந் தில்லை துரையே—உன் கருணையைத்
துதித்துத் துதித்துக் கண்ணீர்
துளும்புமிப் பித்தன்மேல் (கொண்)

சரணம்

யாருக்கும் அடங்காத அகங்காரச் சிறுக்கியோ ?
அடுத்துக் கெடுத்திடும் அபிமானப் பிலுக்கியோ ?
ஊரைக் கலக்கு கின்ற ஊதாரிக் காமியோ ?
ஒன்றைப்பத் தாக்கிடும் சண்டைப் பொருமியோ ?
(கொண்)

## 20. காடுமலை யெல்லாம் தேடி

தோடி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

காடு மலையெல்லாம் தேடியுன்னை யடைந்தேன்
கனகசபை துரையே, தீரென் குறையைக் (காடு)

அநுபல்லவி

வீடுகளை வளைத்தும், ஏடுகளைத் துளைத்தும்,
வித்தகரைப் பணிந்தும், சித்தமடங்காமல் (காடு)

சரணம்

முலைவளர் மாதரை முன்னேகண் டஞ்சினேன் ;
மூக்கைப் பிடித்துக் கொண்டோர்
முழையிலே துஞ்சினேன் ;
அலையும் மனத்தை யின்னும் நிலைநிறுத்த வியலேன் ;
அரனேயுன் னருளின்றி,
திறனே தெனக் கினிமேல் (காடு)

## 21. கண்ணெடுத் தாகிலும்

சிம்மேந்திர மத்திமம்] [ஆதி தாளம்

பல்லவி

கண்ணெடுத் தாகிலும் காணீரோ ?— என்
காவிய மாலையைப் பூணீரோ ? (கண்)

அநுபல்லவி

பண்ணும் பனுவலும் பரதமும் விரதமும்
பக்தியும் கொண்டிங்கே
நித்தியம் தொழும் என்னைக் (கண்)

சரணம்

பட்டம் பதவிபெறப் பாடவில்லை — தங்கப்
 பதக்கங்களை யென்றும் நாடவில்லை — ஐயா
எட்டெட்டுத் திக்கிலும் ஓடவில்லை — உம்மை
 இதய மோனத்தி லன்றித் தேடவில்லை — ஐயா (கண்)

பேருக்கும் புகழுக்கும் பேராசைப் படவில்லை ;
 பெரியபேர் வாலையும் பிடித்துக் கும்பிடவில்லை ;
ஆருயிர்க் குயிராக அறிந்துமை நேசித்தேன் ;
 ஆர்வ மலர்களை அள்ளியள்ளிப் பூசித்தேன் ! (கண்)

## 22. பெண்ணாசை மறந்து

தர்பார் ராகம்] [சாபு தாளம்

பல்லவி

பெண்ணாசை மறந்து நான் - உன்னாசை யுடன்வாழப்
பிரியங்கொண்டேன், பரனே...சுபகரனே (பெண்)

அநுபல்லவி

அண்ணா மலையில் மேவும் அருட்பெருஞ் ஜோதியே,
அன்பருக் குபசாந்தம் அளிக்கும் தயாநிதியே (பெண்)

சரணம்

சேலைப் பகட்டினிலும், செம்பொன் மினுக்கினிலும்,
 சித்தம்விட் டலையாமல், பத்திவை ராக்யமுடன்,
மாலை மல்லிகை போலுன் மணமாலை யாகியே,
 மாசற்று வாழச்செய் தேசுற்ற யோகியே (பெண்)

## 23. அலையாமற் பாருமையா

பைரவி ராகம்] [சாபு தாளம்

பல்லவி

அலையாமற் பாருமையா — என் பேய்மனம்
குலையாமல் வாருமையா — அம்பலவாணரே (அலை)

அநுபல்லவி

சிலைபோலே நிலைபெற்ற தியான சமாதியில்
சிவபோக முண்டிடுந் தவஞ்செய்ய வேண்டினேன் (அலை)

சரணம்

பொய்கண்டு விலக்கிய மெய்கண்ட யோகியின்
போதத்தை யனுதினம் சாதனஞ் செய்திட...
கைகண்ட ஞானத்தைக் காலத்தில் உதவிய
கடவுளே உன்னிடந் திடபக்தி கொண்டிட (அலை)

## 24. எப்போது வருவாயோ

நாட்டைக் குறிஞ்சி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

எப்போது வருவாயோ...எதிர்பார்த்துப் பார்த்து—மனம்
ஏங்குகின்றேன் - கவலை ஓங்குகின்றேன் — சாமி (எப்)

அநுபல்லவி

ஒப்புயர் வில்லாத உத்தமச் சிதம்பரம்
ஒளிரும் நடராஜனே, எளியேன் குடிலைநாடி... (எப்)

சரணம்

காற்றசைந் தாலும்உன் காலடிச் சத்தம் என்பேன்;
கதிரவனை 'நெற்றிக் கண்ணனே வா' என்பேன்.
கூற்றை யுதைத்த வுன்னைக் கூடிவாழ நினைந்தேன்;
குறிப்பறிந் தென்னை நீயே
கூப்பிடக் காத்திருந்தேன்! (எப்)

தூதனுப்பி யழைக்கத் துணைவர் எவரும் இல்லேன்,
துரையேயென் காதலைத்
துணிந்து வெளியிற் சொல்லேன்!
சோதித்த சோதனை போதும் என் நாதனே
தூயரைக் காத்திடத் தூக்கிய பாதனே (எப்)

## 25. நர்த்தனம் செய்யேனோ?

ஸ்ரீ ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

நர்த்தனம் செய்யேனோ? — திவ்ய
நாமத்தைப் பாடிச்சிவ
காமத்தை நாடியே (நர்த்)

அநுபல்லவி

ஸப்த ஸ்வரங்களும் தசவித கமகமும்...
தாளமும் பொருந்தியே
ஜதிமிதித்துத் துதித்தே (நர்த்)

சரணம்

அங்கம் அனைத்துமுன் அன்பு முத்திரை காட்ட...
யாழ் குழல் மத்தளம் ஆனந்தம் ஊட்ட...
சங்கரா ஓம், சச்சி தானந்தா ஓம்' எனத்
தாவியென் ஆவியின் பாவனை ரசங் காட்டி (நர்த்)

கைவழி கண்சாரக் கண்வழி மனம்சாரக்
கண்மாரி யுடன் அருட் பண்மாரி சேரவே...
தைதத்தா, தாம் தரிகிட, தீம்தரிகிட, தோம்தின
தகஜிமி தகஜிமி ததிங்கிண தோமென (நர்த்)

## 26. கண்ணாரக் கண்டு

மத்தியமாவதி ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

கண்ணாரக் கண்டு களித்தேன் - என்
கனக ராஜனைக் (கண்)

அநுபல்லவி

விண்ணோங்கிய வெள்ளி மலையினில்...
விளங்கு கின்ற வேதப் பொருளைக் (கண்)

சரணம்

பரம சாந்த மௌன நிலையில்,
பார்வையையுள் ளடக்கி முற்றும்...
துரிய ஜோதி வடிவ மாகத்
துலங்கு கின்ற சுத்த சிவனைக் (கண்)

பதமலர் தொழும் பற்றைத் தவிரப்
பற்று முற்றும் விட்ட பின்பே...
இதய மலரில் உதய ரவிபோல்...
எழுந்த ஞானக் கொழுந்தை மகிழ்ந்தென் (கண்)

## 27. வழிகாட்டி நடத்தினன்

கௌளிபந்து ராகம்] [தேசாதி தாளம்

பல்லவி

வழிகாட்டி நடத்தினன்
வரதராஜப் பெருமான் (வழி)

அநுபல்லவி

பழிபாவ மானபடு குழியில் விழுந்த வென்னைப்
பரிவுடன் கரையேற்றிப்
பரம பக்தியிற்கூட்டி (வழி)

சரணம்

பொருளறியாது மண்ணைப் பொருளென மதித்தேன்,
பொய்யகங் காரத்தில் போதத்தை மிதித்தேன்;
அருளொளி காட்டியென் இருள்வினையை ஓட்டியே,
அஞ்சலிக் கைநீட்டி அன்பமுதத்தை ஊட்டி (வழி)

## 28. குழலோசை கேட்குதம்மா

கமாஸ் ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

குழலோசை கேட்குதம்மா...
கோபால கிருஷ்ணன் (குழ)

அநுபல்லவி

மழலையும் கிள்ளையும் மந்த மாருதமும்போல்
மாயவன் கோகுல மாதவன் ஊதிடும் (குழ)

சரணம்

ஞால வுயிர்களெல்லாம் நாதக் கனவினிலே
நட்ட சித்திரம் போலே அட்டதிக்கும் இருக்க...
காலவேகமும் ராச லீலையைப் பார்த்து நிற்க...
காதலர் எல்லாம் ஜீவ நாதஸ்வரத்திற் சொக்கக் (குழ)

## 29. கோவிந்தராஜப் பெருமான்

பிலஹரி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

கோவிந்த ராஜப் பெருமான் - அருள்புரிவான்
கொண்ட காரியம் வெற்றி கண்டு மனமகிழக் (கோ)

அநுபல்லவி

தேவர்கள் சேவிக்கும் தில்லை நடராஜன்...
சிற்சபைக் கூத்தினை உற்சாக மாகப் பார்க்கும் (கோ)

சரணம்

கோடி அரக்கர் படை - கூடி யெதிர்த்த போதும்,
கோதண்டத் தாலவர் குலத்தைவேர் அறுத்தவன்...
வாடிய தருமத்தை வானென வளர்ப்பவன்,
வாழையடி வாழையாய் வந்துநம்மைக் காப்பவன்! ()

கொஞ்சும் குழலோசையால் நெஞ்சை யள்ளிக் கலந்து,
கோபியரின் ஆத்மத் தாபத்தைத் தீர்த்த கண்ணன்...
வெஞ்சம ரிடை சோர்ந்த விஜயன் உறுதிபெற
வேத வேதாந்த ஞானக் கீதையுரைத்த வீரன் (கோ)

## 30. அண்ணாமலை அப்பனே

தோடி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

அண்ணா மலை அப்பனே......அருள் புரிவாய்
அண்ணா மலை யப்பனே...... (அண்)

அநுபல்லவி

மண்ணாசை பெண்ணாசை - பொன்னாசைப் பேய்பற்றிப்
புண்ணாகா தினியுன்னைக் - கண்ணாரக் கண்டுருக (அண்)

சரணம்

ஓங்கும் உனது மலை - தாங்கும் குகை வளரும்
யோக முனிவர் போலத் - தாக மோகங்களின்றி...
தூங்காமல் தூங்கிச் சுகம் நீங்கா தனுபவிக்கும்
சுத்த முத்த நிலையிற் - சித்தம் லயித்திடவே (அண்)

## 31. அபராதங்கள் பொறுப்பாய்

அமீர்கல்யாணி ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

அபராதங்கள் பொறுப்பாய் - கண்ணா
அபயம் அபயம் - அபயம் அபயம் (அப)

அநுபல்லவி

உபய பாதம் பற்றிக் கண்ணீர்
ஊற்றி ஊற்றி உள்ளம் உடைந்தேன் (அப)

சரணம்

பாப ஜன்மம் எடுத்தேன் - என்
பரகதியினைத் தடுத்தேன் ;
சாப வினைகள் தப்பிப் பிழைக்கச்
சரணம் சரணம் - சரணம் சரணம் (அப)

சன்மார்க்கத்தை விடுத்தேன் - மனச்
சாந்தத்தைப்பறி கொடுத்தேன்...
துன்மார்க்கத்தைத் தூவென் றுதறத்
தூய பக்தர் நேயம் அருளாய் (அப)

ஈனச் செயல்கள் புரிந்தேன் - உன்
இணையடியினை மறந்தேன் ;
ஞான குருவாய் வருவாய் - என்றே
நம்பி நம்பி நம்பி யிருந்தேன் ! (அப)

## 32. காதலாகினேன்

சுருட்டி ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

காத லாகினேன் - உன்னைக்
காணக் காணக் காண நாளும் (காத)

அநுபல்லவி

மாதவா ஹரே...க்ருஷ்ணா
ஜய மனோஹரா (காத)

சரணம்

வேணு கானம் கேட்ட போதே
வேக தாக மாகினேன்...
நாணம் அச்சம் விட்டுன் அடியை
நாடினேன் ஜகன் மோகனு-மிகக் (காத)

சதுர்மறையின் சார மான
ஸர்வ ஜீவ நாதனே...
மதுர பாவ னையில் உன்னை
மார்புடன் அணைந்து கொஞ்சக் (காத)

உறவு சுற்றம் வீடு வாசல்
உள்ள தெல்லாம் உதறினேன்...
கரவில்லாமல் உன்னையே யென்
கணவனுகக் கைப் பிடிக்கக் (காத)

## 33. பூரணனே உன்னிடம்

உசேனி ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

பூரணனே உன்னிடமிப்
பூங்குழலை ஈந்தேன்—பரி (பூர)

அநுபல்லவி

நாரணனே, என்னுயிரின் நாயகனே, இவ்வுலகின்
காரணனே, கனிமதுர கானரஸம் பொழிவாய் (பூர)

சரணம்

உயிரான ஓடையிலுன் ஓங்காரம் ஒலிக்க,
உள்ளார்வம் உன்பெயரை ஓயாதார் கலிக்க,
அயராமல் உன்அருளால் அங்கமெல்லாம் சிலிர்க்க,
அசையாமல் உன்கரத்தில் அன்புடனே யிருக்க,

ஆனந்த பக்திமலர்
அனுதினமும் பூத்துனக்கே,
அள்ளி அள்ளி யருச்சித்தென்
உள்ளமெல்லாம் குளிர (பூர)

## 34. என்னுயிர்க் குயிராகி

கானடா ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

என்னுயிர்க் குயிராகி மன்னுயிர் அனைத்துமாய்
இருக்கும் பரா பரனே — பவஹரனே (என்)

அநுபல்லவி

உன்மயம் ஆகும்இவ் உடலையும் உயிரையும்
உளத்தையும் மனத்தையும் அனைத்தையும் ஏற்றருள் (என்)

சரணம்

கற்பதெல்லாம் உனது கருத்தன்றி வேறில்லை ;
கதைப்பதெல் லாமுனது கதையின்றிப் பிறிதில்லை ;
நிற்பதெல் லாமுனது நிசவழி யன்றியில்லை ;
நிகழ்வதெல் லாமுனது நியதியல்லால் இல்லை... (என்)

வாக்கினில் இருக்கின்றாய் ; வாய்மையே பேசுவேன் ;
மனத்தினில் இருக்கின்றாய் ; மலரடியே நேசிப்பேன் !
நோக்கினில் இருக்கின்றாய் ; நோக்குவேன் உன்னையே ;
நூறாயி ரம்விதமாய் நுவலுவேன் உன்புகழே ! (என்)

## 35. அலங்காரம் போதுமடி

சௌராஷ்டிக ராகம்] [சாபு தாளம்

பல்லவி

அலங்காரம் போதுமடி, சகியே — இது
அவர் வரும் நேரமடி ! (அல)

அநுபல்லவி

கலங்காத காதலைக் கண்டு களிப்பவர்
கனதனச் சுமைகளைக் கண்டு சிரிப்பாரடி (அல)

சரணம்

முகவெட்டைப் பார்த்தவர் மோகித்துப் போகமாட்டார் ;
முத்தணி மினுக்கினிற் சித்தம் வைக்க மாட்டார் ;
அகமுரு கிப்புரியும் அன்பையே நேசிப்பார் ;
அருளையே விரும்பிநீ ஆர்வமாய்ப் பூசிப்பாய் ! (அல)

கள்ளத் தனுக்கெல்லாம் கருணைக்குப் பகையாகும்;
கட்டித் தங்க நகைகள் கலவிக்குத் தடையாகும்;
உள்ள படி யிருந்தால், அள்ளி யணைவாரடீ!
ஒய்யாரப் பிலுக்கின்றி மெய்யார வணங்குவோம் (அ)

## 36. உருகிடுவாய் மனமே

### (முருகன் தியானம்)

காபி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

உருகிடுவாய் மனமே — வேல்
முருகா முருகா முருகாவென் றேதினம் (உருகி)

அநுபல்லவி

வருவாய் - எனது ஞான
குருவாய் - ஓங்கார ஜபம்
தருவாய் - திருமாலின்
மருகா - ஷண்முகா வென்றே (உருகி)

சரணம்

சூரபத்மா சுரனகங் காரத்தை யழித்தவன்;
தொண்டரை வருத்திடும் துயர்களை ஒழித்தவன்;
காருண்ய விரதனும் கலியுக வரதனும்
கந்தனை ஸ்ரீவள்ளி காந்தனையே நினைத்தே (உருகி)

## 37. கருணாகரனே, பரனே

விஜயஸ்ரீ ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

கருணா கரனே பரனே சரணம் — கதி வேறில்லை (கருணா)

அநுபல்லவி

அருணா சலனே, சிவனே, அபயம், அபயம்;
அஞ்சலளித்தெமை ஆதரி யப்பனே (கருணா)

சரணம்

கோர ராக்ஷஸர்கள் குண்டு பீரங்கிகளால்
கொன்றிவ் வுலகமெல்லாம் வென்று நடுக்குகின்ருர் ;
பாரத தேசத்தைக் காத்திடுவாய் — எம்மைப்
பரிவுடன் கடைக்கண்ணுல் பார்த்திடுவாய் — அப்பா
(கருணு)

## 38. நீயே எனது ஜீவன்

லலிதா ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

நீயே எனது ஜீவன் ; நினது பக்தி எனது முக்தி (நீயே)

அநுபல்லவி

தாயே, யென் கருணைமிக்க
தந்தையே, உன் அன்புமிக்க
சேயே யான் ; உனது சித்தம்
செய்வதேநான் உய்வதாமே (நீயே)

சரணம்

சகல கலையும், வேதாகம சாஸ்திரமும், கற்ருேர் போற்றும்
ஜகஜீவ பரஞானமும், ஸகுணநிர்க் குண பாவமும்,
இகபரகதி யெல்லாம் உனது
சுகுண கான சுக மொன்றே,
அகமகமென அனவரதமும்
அன்ப ருள்ளே யாடு கின்ற (நீயே)

## 39. நீயின்றி நானில்லை

பந்துவராளி ராகம்] [சாபு தாளம்

பல்லவி

நீயின்றி நானில்லை, நினைப்பில்லை, செயலில்லை,
நிலையொன்றும் இல்லை, இறைவா ! (நீயி)

அநுபல்லவி

வாயில் உன் வாய்மையை, மனத்தில் உன் தூய்மையை,
வாழ்வில் உன் அன்பினை வளர்த்திட நீயருள்வாய் (நீயி)

சரணம்

யாக்கை உனது சக்தி ஆலயம் எனக் காப்பேன் ;
அணுவணு விலும் உன்றன்
அருளாடலைப் பார்ப்பேன்...
வாக்கை யுனது கவி பூக்கும் சோலை யாக்குவேன் !
வாழ்வெல்லாம் உன்வெற்றி மாலையாக்கி மகிழ்வேன்.
(நீயி)

## 40. சுதந்தரம் தாரும் ஐயே

மாயாமாளவ கௌளம்] [ஆதி தாளம்

பல்லவி

சுதந்தரம் தாரும் ஐயே — ஆத்ம
சுதந்தரம் தாரும் ஐயே ! (சுதந்)

அநுபல்லவி

இதந்தரும் அறம் பொருள் இன்பம்வீ டாகிய
இனிய நாற் செல்வமும் எங்களுக் கெய்தவே (சுதந்)

சரணம்

துயர்செய்யும் இடர்களைத் தூருடன் கெடுக்க,
துர்ப்பலத் தைதை யொழித்துத் துணிவுகொண் டுழைக்க,
சுயநல அகங்காரத் தொல்லையை மடிக்க,
சுத்தசன் மார்க்கக் கொடி தூக்கிப் பிடிக்கவே (சுதந்)

உண்மையை உண்மையென் றுலகின்முன் உரைக்க,
ஒளிபெறும் உன்னருள் உள்ளத்திற் சிறக்க,
திண்மையாய் எதிர்த்துநான் தீமையைச் சிதைக்க,
தேசமெல் லாமுனது திருப்புகழ் விளக்கவே (சுதந்)

## 41. வரமருள்வாய்

ஜயந்தஸ்ரீ ராகம்] [தேசாதி தாளம்

பல்லவி

வரமருள்வாய் பரமேசனே (வர)

அநுபல்லவி

சரணும் புயத்தேன் சந்ததமும் உண்டுன்
சங்கீதஸா தனம்செய்திடவே (வர)

சரணம்

துச்சமான நினைவு தூரச்சென் றொழிய,
துயர் செய்யும் வறுமை தூருடன் அழிய,
அச்சமின்றி யெங்கும் அன்புவெள்ளம் பொழிய,
அறிவுங் கலையுந் திருவுந் தழைக்க... (வர)

## 42. சித்தவுறுதி யின்றி

சாமா ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

சித்த வுறுதியின்றி பக்தி நிலைக்குமோ
ஸ்ரீமஹா தேவ குருவே... (சித்த)

அநுபல்லவி

பித்துப் பிடித்தலையும் பேய்மனக் குரங்கினைச்
சத்தமில் லாதடக்கிச் சாதனம் செய்திடும் (சித்த)

சரணம்

ஜபதப தியானத்தால் சம்யமம் சிததிக்க,
சஞ்சல மில்லாத சமாதியி லேயிருக்க,
சுபமங் களஜோதி சொரூபத்தி லேலயிக்க,
சுத்த துரியசிவ போகசுகம் புசிக்க (சித்த)

## 43. இன்றும் வரவில்லையே

இந்துஸ்தான் காபி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

இன்றும் வரவில்லையே — உலகினில்
இன்னலுக் கெல்லை யில்லையே — ஜகதீசன் (இன்)

அநுபல்லவி

அன்றுமுப் புரங்களை அழித்த நெற்றிக் கண்ணன்
அருள்புரிவான் என்றே ஆசையாய் நம்பினேன் (இன்)

சரணம்

பாரில் அரக்கர் செய்யும் போர்மேகம் படர்ந்ததே;
பஞ்சமா பாதகர் வஞ்சனை அடர்ந்ததே...
கார்மேகம் போலச்செந் நீர்மேகம் பொழியுதே;
காப்பாற்றுந் தருமமோ கதிகெட்டிங் கழியுதே...
(இன்)

காமக் குரோத லோபக் கடுமோகப் பேய்க்குலம்
கட்டின்றி வாழ்வினை வெட்டி வெட்டிச் சாய்க்குதே;
பூமியைக் காத்திடும் — சாமியெங்கே யென்றே
புண்ணியர் பரிதாபக்—கண்ணீர் விடுகின்றார்... (இன்)

## 44. யாரும் இல்லையோ?

கீர்வாணி ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

யாரும் இல்லையோ - நண்பர்
யாரும் இல்லையோ? (யாரும்)

அநுபல்லவி

பேரு யர்ந்த பித்தன் மேல்யான்
பெரிய பித்தன் என்று சொல்ல (யாரும்)

சரணம்

எந்த நாளும் அன்பருக்குச்
சொந்த மான தொண்டர் நேசன்,
சுந்தரர்க்குத் தூதுசென்ற
சுந்த ரேசன் இளகப் பேச (யாரும்)

## 45. வைத்தபடியே யிருப்பாய்

நடபைரவி ராகம்] [திரிபுடை தாளம்

பல்லவி

வைத்தபடியே யிருப்பாய் - பரமசிவன்
மலரடி தன்னை நினைப்பாய் — மனமே நீ (வை)

அநுபல்லவி

அத்தன் என் ஆண்டவன் அம்பலத் திருக் கூத்தன்
அஷ்ட மூர்த்தியின் அருள்
இஷ்டப் படிக்கே உன்னை (வை)

சரணம்

உள்ளத்தில் அடங்காமல் ஊரெல்லாம் திரிந்தென்ன ?
ஊருக்குப் பகட்டாகப் பேருக்கு வாழ்ந்தென்ன?
தெள்ளிய சித்தமும், சீரிய பக்தியும்,
தியானமோன ஜபமும், கான பூஜையும் செய்தே
(வை)

## 46. மோகன வலை வீசினன்

பேஹாக் ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

மோகன வலை வீசினன் - சிவபெருமான்
மோகன வலை வீசினன் ! (மோ)

அநுபல்லவி

தேகபுத்தி தவிர்க்கத் தாகம் எழுப்பி, — வெகு
வேகமாய் வந்துபரி—
பாகங் கொடுக்கவொரு (மோ)

சரணம்

சுற்றில கின்சுகத்தைத் தூசிபோல் ஒதுக்கிடச்
சூழ்வினைப் பாசத்தைத் துண்டுதுண் டாக்கிட
முற்றும் அவன் சுகத்தில் மூழ்கித் திளைத்திடவே
முக்கண்ணன் என்னுயிரைப்
பக்குவ மாய்ப் பிடித்தே (மோ)

## 47. எல்லாம் சிவன் செயல்

கல்யாணி ராகம்] [சாபு தாளம்

பல்லவி

எல்லாம் சிவன் செயல்—என்றே கவலையின்றி
இருப்பாய் நீ மட நெஞ்சமே (எல்)

அநுபல்லவி

பல்வேறு குணப்போர்கள் தொல்லைசெய் உலகினில்,
நல்லது வந்தாலும், பொல்லது வந்தாலும் (எல்)

சரணம்

ஊரெல்லாம் பழித்திடப் பேரெல்லாம் கெட்டாலும்,
உறவினர் யாவரும் உன்னைக்கை விட்டாலும்,
பாரெல்லாம் இச்சையாற்
படைத்தவன் இருக்கின்றான் ;
பக்தரைக் கைவிடான் ; சத்தியம் செய்கிறேன் (எல்)

பஞ்சமா பாதகர் வஞ்சனை செய்தாலும்,
பதங்கெட்ட தீயவர் நிதமுன்னை வைதாலும்,
அஞ்சல் அஞ்சல் என்றே அச்சத்தைப் போக்கிடும்
அப்பன் இருக்கின்றான் ;
அடியாரைக் காக்கின்றான் (எல்)

## 48. கொட்டம் அடங்கி

சாவேரி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

கொட்ட மடங்கிச் சும்மா இருப்பாயே - மனக்
குரங்கே உன் சேட்டையை விடுப்பாயே (கொட்)

அநுபல்லவி

குட்டிக்கரணம் போட்டுக் குப்பையில் விழுகின்றாய்,
குடிகாரப் பேய்போலே கூக்குர லிடுகின்றாய் (கொட்)

சரணம்

பொழுதைக் கொலைபண்ணும் புல்லரைக் கூடாதே,
பொய்யினை மெய்யென்றே புத்திகெட் டோடாதே ;
கழுதைக் குபதேசித்த மொழியென நடக்காதே ;
கரடியீ யோட்டிய கதையை நடிக்காதே (கொட்)

வஞ்சப் புலன்வழியே வாசலுக் கோடாதே,
வம்பு வழக்குகளை வலியநீ தேடாதே ;
குஞ்சித பாதத்தைக் கொஞ்சம்விட் டகன்றாயோ
கொடுப்பேன் உதை — வாலை
வெடுக்கென் றறுப்பேனடா (கொட்)

## 49. சாதனம் செய்ய வாரீரே

ஆனந்தபைரவி ராகம்] [திரிபுடை தாளம்

பல்லவி

சாதனம் செய்ய வாரீரே—பரமபக்தி
சாதனம் செய்ய வாரீரே... (சா)

அநுபல்லவி

சாதி மதவிகாரச் சண்டைகளை விடுத்தே
சகலர்க்கும் பொதுவான
சன்மார்க்கத் தைப்பிடித்தே (சா)

சரணம்

காட்டுக் குரங்குபோலே
கனிவகை யுண்டென்ன ?
கயத்தினிற் கொக்குப்போற்
கண்மூடி இருந்தென்ன ?
நீட்டி மழித்தே வேடம்
காட்டிப் பயனென்ன ?
நிலையாகிச் சித்தத்தை
அலையாது காத்திடும் (சா)

பனிக்கர டியைப்போலே
தனிமையிற் புதைந்தென்ன ?
பஞ்சைத் தரித்திரம்போல்
பட்டினி யிருந்தென்ன ?
இனிக்க இனிக்க மனம்,
பனிக்கப் பனிக்க விழி,
இறைவனை யெண்ணி அன்பு
கரைபுரண் டோடவே (சா)

வனத்திலே திரிந்தென்ன ?
மலைக்குகை யிருந்தென்ன ?
வலைவிழி மாதரை
அலியென வெறுத்தென்ன ?

மனத்தினை வென்றிட,
மமதையைக் கொன்றிட,
மன்றினில் ஆடும் ஞான
மணியினை அணுகிடும் (சா)

## 50. ஆத்ம தரிசனம்

செஞ்சுருட்டி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

ஆத்ம தரிசனம் செய்வோமே—பர
மானந்த ஜீவனம் எய்வோமே—வாரீர் (ஆத்ம)

அநுபல்லவி

பூத்த காலையின் முகப் புன்னகை போலவே,
புனிதமாகப் பொலியும்
பொன்னுளத் தாலே—பர... (மாத்ம)

சரணம்

இருவிகா ரத்தை வென்ற ஒருமனத் திறத்தினல்,
எமனுக்கும் அஞ்சாத சமசித் தத்தினல்,
அருணஜோதியைப் போலே அன்பரின் உள்ளத்தில்
அதுவாய் எழுந்தொளிரும்
பொதுநடப் பொருளாம்சுத்... (தாத்ம)

## 51. அன்பிருந்தாலே போதும்

கேதாரகௌளை ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

அன்பிருந் தாலே போதும் ஆண்டவனே—இந்த
அகில வுயிர்களையும் பூண்டவனே—சிவனே உன் (அன்)

அநுபல்லவி

மின்பொலி வென்னச் செல்லும் புன்புவி மோகமின்றி,
என்பொருள் எனவொன்றும் இல்லையெனச் செய்தே
உன்பரம் என்றே வாழும் இன்பச் சுயேச்சை தரும் (அன்)

சரணம்

மனமலர் கொண்டேயனு தினமுன்னை யர்ச்சித்து,
மாசற்ற பணிவினால் மலரடி வந்தித்து,
அனைத்துமுன் சித்தமென்றே அறிந்து பிற மறந்தே,
ஆத்ம ஸமர்ப் பணத்தால் அள்ளியுன்னை யணையும் (அன்)

## 52. உனக்குச் சமானமாய்

மணிரங்கு ராகம்] [சாபு தாளம்

பல்லவி

உனக்குச் சமானமாய் ஒருவரைச் சொல்லவோ?
ஒப்புயர் வில்லா அப்பனே—பரம்பொருளே (உனக்)

அநுபல்லவி

'எனக்குச் சமானமா?' என்றுமார் தட்டிய
எண்ணாயி ரங்கோடிப் பேர்—
மண்ணாகக் கண்டு விட்டோம் (உனக்)

சரணம்

தீயின்றி உலகுண்டோ, நீரின்றி மீனுண்டோ?
நீலவான் சுடரின்றி நீளுயி ருலகுண்டோ?
தாயுந் தந்தையுமாகத் தயவுடன் எப்போதுந்
தாங்கியெங் களைவிட்டு நீங்காத கடவுளே (உனக்)

## 53. அபயக் கரத்தை

பேஹாக் ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

அபயக் கரத்தைப் பார்த்த போதே
அச்சம் ஒழிந்தேன்—சிவனே உன் (அபய)

அநுபல்லவி

உபய பாதம பற்றும் அன்பர்
உய்யக் கருணை பெய்யும் துய்ய (அபய)

சரணம்

குஞ்சிதபத நிழலினில் இடம் கொடுத்தே,
கோபப் பாசம் வீசும் கூற்றைத் தடுத்தே...
அஞ்சல், அஞ்சல்' என்றே செஞ்சிலம் படிகள்
ஆர்க்க நடமாடும் ஆனந்தமே உன் (அபய)

## 54. பரமேசனை

உதயரவிசந்திரிகா ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

பரமேசனைப் பார்வதி பாகனைப்
பார்க்கப் பார்க்கப் பார்க்கப் பரமானந்தமே (பரமே)

அநுபல்லவி

வரநாதனை, கிரிராஜனை,
வாகீசாதி முனிவர் வாழ்த்தும் பாதனைப் (பரமே)

சரணம்

சித்த சாந்தியுடன் பக்தி செய்யுந் தொண்டர்
சிந்தனைக் கமுதாய் வந்து வந்தினிக்கும்,
சுத்தமுக்த சுகா னந்த வாரியை...
சுரர் போற்று கின்ற கருணை நிதியைப் (பரமே)

## 55. ஆனந்தமே!

ஜுஜாவளி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

ஆனந்தமே-பர-மானந்தமே—சிற்
றம்பலக் கூத்தனை அன்பு செய்தால் (ஆனந்)

அநுபல்லவி

ஞானத்திலே-பர-மோனத்திலே—நி
தானத்திலே-வளர்-தியானத்திலே கலந்தால் (ஆனந்)

சரணம்

பக்தியிலே—நெஞ்ச—மத்தியிலே-சித்த
சுத்தியிலே—ஆத்ம—சக்தியிலே—உணர்
தத்துவனை-ஜோதி—சத்துவனைக்-கூடி
நித்திய மானஜீவன்-முத்திகிடைத்துவிட்டால் (ஆனந்)

பாசமற்றே-மனப்-பூசலற்றே—வெளி
வேஷமற்றே-து-வேஷமற்றே—வேறு
பேசலற்றே—அருள்—நேசமுற்றே—சிவ
தாசனாய்ச்-சிதம்பர—நேசனாய் வாழ்ந்திடின் (ஆனந்)

## 56. ஆர்வத் தீயால்

[இராகமாலிகை]

ஆர்வத் தீயால் அன்புள் ளுருகி
அருவி போல வருவது பாட்டாம் :
குரலும் சுருதியும் கூடிக் குழைந்து
கமகமுந் தாளமுங் கனிவுறப் பொருந்தி
பாட்டின் கருத்து பளிச்செ்ன விளங்கக்
கேட்டா ருள்ளங் கிளர்ச்சி கொள்ள,
உணர்ச்சி ததும்ப, உள்ளங் குழைய,
நவரஸ பாவனை நயமுற நாட்டிப்
பரவையும், வசந்தப் பறவையும் போலக்
கலையி னுள்ளங் கடவுளைக் காட்ட,
வீடு திருந்த, நாடு சிறக்கவே
இயல்பா யிசைத்தல் இசையென லாமே!
இன்பப் பொருளே இசையின் பயனும்!

## 57. அஞ்சலாமோ நெஞ்சே?

ஸுகாரி ராகம்] [சாபு தாளம்

பல்லவி

அஞ்சலாமோ நெஞ்சே—என்றும்
அன்பரைக் காத்திடும்,
ஆண்டவன் இருக்கையில் (அஞ்ச)

அநுபல்லவி

சஞ்சலம் இல்லாமல் இருப்பாயே—வீண்
சங்கடம் எல்லாம் வேரோ டறுப்பாயே—சிவ
சங்கரன் அருள்செய்ய எங்குமே இருக்கின்றான் (அஞ்ச)

சரணம்

மானிடம் ஆத்மாவின் சட்டை—அது
மாறி யழியும் லொட லொட்டை—சதா
நானெனும் அகம்பாவ மூட்டை—இதன்
நாட்கள் உதிரும் பழ மட்டை—என்றும்
இறவாமல்-மீண்டும்
பிறவாமல்—உள்ள
ஈசனே--உன்னுயிர்
வாசன்-சுயம்ப்ரகாசன் (அஞ்ச)

எண்ணில்லாதவர் புவி ஆண்டாரே—பலர்
இறுமாந்து மண்ணுகி மாண்டாரே—சிலர்
புண்ணியப் பயன்களைக் கண்டாரே—அவர்
பொங்கும் புகழ் முடி பூண்டாரே—மனமே!

செல்வாய்...அருள்வழி
செல்வாயே—என்றும்
சித்தத்தைச் சிவனடி
வைத்துநீ நேசித்தால் (அஞ்ச)

அரக்கர் படையொலி கேட்டாலும்—அவர்
ஆகாச குண்டுகள் போட்டாலும்—சற்றும்
இரக்கமில் லாத வஞ்சர் சுட்டாலும்—பொல்லா
எமனே எதிர் வந்து விட்டாலும்—மனமே!

பதருதே—சித்தம்
சிதருதே—இந்தப்
பாரைப் படைத்தாளும்
பரமன் இருக்கின்ருன் (அஞ்ச)

## 58. கண்ணுலே உன்னை நான்

சக்ரவாக ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

கண்ணுலே உன்னைநான்
காணவேண்டும் - ஐயனே (கண்ணு)

அநுபல்லவி

மண்ணுர் புவிப் பொருள்களெல்லாம்
மறந்து பற்றைத் துறந்து—ஞானக் (கண்ணு)

சரணம்

அரைகுறை யான கலையைக் கடந்தே,
அருளறிவைப் பெற்றுப் பாசத்
திரை விலகித் தேஜோன்மய
திவ்ய தீப ரூபமாகக் (கண்ணு)

## 59. கவலைப்படாதே மனமே

பைரவி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

கவலைப்படாதே மனமே-என்ன வந்தாலும்
கவலைப் படாதே மனமே...

அநுபல்லவி

கவலையென்பது மாயக் கசடன்றி வேறில்லை
கண்விழித்தால் பகற் கனவன்றி நிசமில்லை (கவலை)

சரணம்

புல்லிய சுகங்களைத் தேடுவார்—வாயாற்
புலியென்றூற் கிலிபிடித் தோடுவார்—தூய
நல்லசன் மார்க்கத்தைச் சாடுவார்—நிதம்
நாக்கை வளர்க்கத் தீமை தேடுவார்—எண்
சாணான தேகத்தை
வீணாக்குவார் அவரே;
சஞ்சலப் பட்டுப்பட்டுச்
சாவை யழைப்பாரே— (கவலை)

வெல்வோ மென்றோர் பலர் புண்ணானார்—அரசு
வீற்றிருந்தோர் எல்லாரும் மண்ணானார்—செல்வம்
செல்வோம் என்றே செல்லக் கண்ணாலே—பார்த்தோம்
சேர்வதெல்லாம் சேரும் தன்னாலே—நிதம்
சித்த சலனமின்றிச்
சிவபாதமே பற்றிச்
சிந்திக்கச் சிந்திக்கப்
பந்தவினை யொழியுமே (கவலை)

கூற்றை யுதைத்த சிவன் காப்பானே—அன்பர்
குறைகளை யெல்லாம் அவன் தீர்ப்பானே—வேகக்
காற்றைப்போல் வந்து கதி சேர்ப்பானே—அவன்
கையில் இருப்பதிந்தப் பூப்பாரம்—இதை
அறிந்தவரே - ஞானம்
தெரிந்தவராம்—உன்னுள்
அருட்பெருஞ் ஜோதியாம்
ஆண்டவன் இருக்கையில் (கவலை)

## 60. புதுயுகம் வரவேண்டும்

காபி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

புதுயுகம் வர வேண்டும்—நாங்கள்
பூரணராய் - நர - நாரணராய் வாழப் (புது)

அநுபல்லவி

இது பொருளென்றெம் இதயம் உணரப்
பொதுநடம்புரி புண்ணியனே—நல்ல (புது)

சரணம்

மனவிகாரமாம் ஜாதிமதபேதம்
மாறும் சமநிலை வேண்டும்...
எனதெனதென்னும் சண்டைகள் இன்றியே
எல்லாரும் ஒன்றாக வேண்டும்...
ஜனசமுதாயம் எங்குமே திவ்விய
சங்கம் விளங்கிட வேண்டும்...
உனது சச்சிதானந்தச் சிகரத்தில்
உள்ளம் உலாவிட வேண்டும்... (புது)

சோற்றுத்துயர் தீர வேண்டும்—உடற்
சோம்பல் ஒழிந்திட வேண்டும்...
ஆற்றல் பெருகிட வேண்டும்—நெஞ்சில்
அச்சம் ஒழிந்திட வேண்டும்...
கூற்றைக் குமைத்திட வேண்டும்—உன்னைக்
கூடிச் சுகம்பெற வேண்டும்—சக்தி
ஊற்றைப் பெருக்கி...உலகினை வென்றிங்கே
யோகமும் போகமும் ஏகரஸமாகும் (புது)

## 61. வருவானோ வனக்குயிலே

சஹானா ராகம்] [தேசாதி தாளம்

பல்லவி

வருவானோ வனக் குயிலே—நடராஜன்
வருவானோ மனக் குயிலே! (வரு)

அநுபல்லவி

திருவோங்குந் தில்லையிற் சின்மய நடஞ் செய்யும்
தேவாதி தேவன், என்னுள் சேவடி வைத்தாட (வரு)

சரணம்

பங்கப்பட்டுப் பட்டுன் பாதத்தை நாடினேன் ;
பாரினில் உனையன்றி ஓர்துணை வேறில்லேன் ;
"எங்கேநீ இருக்கின்றாய் ?' என்றேநான் கதறவும்,
'இங்கேநான் இருக்கின்றேன்' என்றே மறைந்தவன் (வரு)

அருணோதயம் போலே அழகன், குழகன்—என்
ஆருயிர்க் குயிரான சூரியன் ; பூரணன் ;
கருணை முகங் காட்டிக் 'கவலைப் படாதே' யென்று
கண்ணீர் துடைக்குமென் கண்ணன முக்கண்ணன் (வரு)

## 62. அந்தநாள் இனி வருமோ ?

ஆரபி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

அந்த நாள் இனி வருமோ—சொல்லடீ,
அம்பலப் பசுங் கிளியே ? (அந்த)

அநுபல்லவி

எந்தெந்த வேளையும் இதயத்திற் பதம் வைத்தே,
இருக்கிறேன், இருக்கிறேன்
என்றவன் கூத்தாடும் (அந்த)

சரணம்

தஞ்சம் புகுந்தவரைத் தாங்குவ தென்பாரம்,
தளராமல் உன்அன்பு வளருவதே தீரம் !
அஞ்சல் அஞ்சல் என்றே அபயமளித்தென் ஐயன்,
ஆனந்த ஜோதியில் தானாக்கிக் கொண்டாளும் (அந்த)

## 63. உனையே காதலித்தேன்

பரசு ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

உனையே காதலித்தேன்—பரம்பொருளே !
உருகியுருகிக் கண்ணீர்
பெருகிப் பெருகி நிதம்... (உனை)

அநுபல்லவி

தனையே நினைத்தோரைத் தானாக்கிக் கொண்டிடும்
தற்பரனே, தில்லைச் சிற்பரனே—அடியேன் (உனை)

சரணம்

சுற்றிச் சுற்றி யுலகை முற்றிலும் பார்த்தலுத்தேன்;
துயர்வீசி யடித்திடும் புயல்களைப் பொறுத்தேன்;
கற்றபுலவர் செய்யுங் கலைவாதமும் வெறுத்தேன்;
காமத்தை யெல்லாம் சிவ
காமமாக்கி யென்நாளும்...... (உனை)

எத்தனையோ செல்வம் எய்தி யெய்தி யிழந்தேன்,
இருப்பதெல் லாமுனது
திருப்பத நிழ லொன்றே!
பித்துப் பிடித்துன் பெயர் பிதற்றுவ தைத்தவிரப்
பிழைக்க வழியறியேன்;
அழைத்தென்னை யாட்கொள்வாய் (உனை)

## 64. பாரமெல்லாம் வைத்தேன்

கண்டா ராகம்] [சாபு தாளம்

பல்லவி

**பார**மெல்லாம் வைத்தேன்—உன்பாதத்தில்
பாரமெல்லாம் வைத்தேன்... (பார)

அநுபல்லவி

ஆருயிர்க் குயிராகும் அப்பாநீ அகிலத்தை
அணுவெனத் தாங்கிடும் ஆற்றலைப் பார்த்துநான் (பார)

சரணம்

நிலையின்றி எப்போதும் அலைமனஞ்சேர் வினை
மலைமலை யாயென்னுள் மண்டிக் கிடக்குதே (பார)

இருவினை மூட்டையை இனிச் சுமக்க மாட்டேன்...
கருவினை தவிர்க்கவுன் கருணையை விடமாட்டேன் (பார)

சந்தையும் கலைந்தது; சரக்கெல்லாம் விற்றது;
வந்த வரவையும் தந்துவிட் டேன்—ஐயா (பார)

கூப்பிடுந் துணைக்கிங்கே கூட வருவாரில்லை...
சாப்பிட்ட சத்திரம், காப்பாற்றும் வீடாமோ? (பார)

போக்கு வரவு செய்யும் பொய்மனச் சுமையினைத்
தூக்க வலியில்லை தோன்றாத் துணை நீயே... (பார)

## 65. தக்ஷனை யழித்தானே

(சிவதாண்டவம்)

மோகன ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

தக்ஷனை யழித்தானே... தாண்டவ சிவன்
தணலென விழித்தானே (தக்ஷ)

அநுபல்லவி

தக்க தகிடவென—திக்கு நடுநடுங்கத்
தொக்கி யசுரன் சதை—பக்கமெங்கும் சிதறத் (தக்ஷ)

சரணம்

முக்கண்ணன் காமாரி, முப்புர ஸம்ஹாரி,
மூல சக்தி பாகன், முதல்வன் பரம யோகி,
தக்கிட தக்கிட, தகதக திமிகிட
தத்தா தையத்தா ததிங்கிணத் தோமெனத் (தக்ஷ)

ஹரஹர மஹாதேவ, சிவநம வெனச் சுரர்,
அஞ்சி யபயமிட்டுத் தஞ்சம் புகுந்திட,
நெரநெர வெனப்பற்கள் நெற்றிக் கண்ணைத் திறந்து,
நிருதன் மமதை யெல்லாம் நீறுபட் டொழிந்திடத் (த)

சித்தர் கணங்க ளெல்லாம் செயமலர் சொரிந்திடத்
தீச்சுட ரான சக்தி திசையெங்கும் பரந்திட
தத்தித் தையென ருத்ர நடம்புரிந்து,
செகமெலாம் கிடு கிடு கிடுவென அதிர்ந்திட (தக்ஷ)

## 66. எப்போது விடுதலையோ?

முகாரி ராகம்] [திரிபுடை தாளம்

பல்லவி

எப்போது விடுதலையோ?—வெள்ளி
இமயத்தில் விளங்கிடும்
உமைமருவும் சிவனே (எப்)

அநுபல்லவி

முப்புரங் களைச் சிறு முறுவலால் எரித்தோனே,
முயலகன் செருக்கினை முற்றிலும் அழித்தோனே (எப்)

சரணம்

நாமரஸ மின்றித் தாமஸ மாயையில்,
நாட்களைச் சூதாடி நலியவோ நான் பிறந்தேன்?
காமனை யெரி நெற்றிக் கண்ணைத் திறந்தென்னைக்
கட்டிய தளைகளைச் சுட்டெரிப்பாய்—பரனே (எப்)

## 67. இரவும் பகலுமுன்

எதுகுல காம்போதி ராகம்] [அட தாளம்

பல்லவி

இரவும் பகலு முன் சரணலை யப்பணியில்
இருந்திடும் வரந் தருவாய் (இர)

அநுபல்லவி

தருண மழைபோலென் தாகம் தணிக்கவந்த
தாஸர் தயாநிதியே, சாந்த குணபதியே (இர)

சரணம்

தஞ்சம் புகுந்தவர் நெஞ்சக் கவலை தீர்க்கும்
சமய சஞ்சீவி யாவாய்;
பஞ்சகோ சாதீத பரம துரியநிலை
பார்க்கத் துணை புரிவாய்;
அஞ்சும் அடங்கி யென்னுள் அறிவா யிருந்திடும்
ஆனந்தம் தந்தருள் ஞான சிகாமணியே! (இர)

## 68. பரமனைச் சிந்தை செய்வோம்

யமுனு கல்யாணி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

பரமனைச் சிந்தை செய்வோம்—ஒருமையுடன்
பரமனைச் சிந்தை செய்வோம்! (பர)

அநுபல்லவி

அரனென்றும் அரியென்றும் அயனென்றும் முத்தொழில்
ஆக்கி விளையாடும் அருட்பெருஞ் சோதியாம்... (பர)

சரணம்

மானுபி மானத்தை மாறுமல் அடக்கியே,
மனக்குரங் கின்சேட்டை அனைத்தையும் ஒடுக்கியே,
நானெனும் ஆணவம் நாணித் தலைகுனிய
நாறு விகாரமின்றித் தானேதா னாகிடும்... (பர)

வானத்தின் விரிவிலே வளரும் சூரியன்போலே,
வையத்தி லேவெள்ளி மலையின் மாண்பைப் போலே,
மோனத்திலே, சுத்த ஞானத்திலே-ஜீவன்
முத்தியிலே வளர்—சக்தி மஹேசனும்... (பர)

## 69. மானிட ஜன்மம்

சுருட்டி ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

மானிட ஜன்மம் மாறிப் பிறக்க
மருந்தருள் சிவனே-இந்த (மானி)

அநுபல்லவி

ஊனின் பாச மான வினையை -முற்றும்
உதறிக் கவலைப் பதர்கள் சிதறி (மானி)

சரணம்

இருவி கார மனத்தைக் கட்டி
இருளகந்தையை வெட்டி...
ஒருவி காரமு மின்றி - யுன்னை
ஒன்றி - மன்றில் - நின்று - வாழ (மானி)

## 70. தேவ ஜீவனம்

பந்துவராளி ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

தேவ ஜீவனம்—அருள்
தேவ தேவனே—சிவனே! (தேவ)

அநுபல்லவி

சாவை வெல்லும் சஹஜாத்தும
சக்தியால் ஜீவன்-முக்தி வளரும் (தேவ)

சரணம்

இருவிகார மனத்தைத் தாண்டி,
இதயாம்பர வெளியில்...
நிருவி கார துரிய நிலையில்
நின்றுன் னருளில் ஒன்றி வாழும்... (தேவ)

வானும் புவியுங் கூடிக் குழையும்
வாழ்வி னின்பம் இலக,
ஞானதேகம் எய்திப் பிரணவ
நாத ஜோதி சித்தி பொலியவே... (தேவ)

## 71. பூரண ஞானி யவனே

தேவகாந்தாரி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

பூரண ஞானி யவனே—உலகினில்
புருஷோத்தமன் அவனே (பூரண)

அநுபல்லவி

தீரன்—மனத்தை வென்ற
சூரன்—எதற்கும் அஞ்சா
வீரன்—எல்லார்க்கும் உப
காரன்—நிர்விகாரன் (பூரண)

சரணம்

'அது'வென்று வேதஞ்சொல் பொதுநடப் பொரு ளினை,
ஆருயிர்க் குயிரென்றே அறிபவன், அருளினல்;
எது வரினும் கவலை யில்லாமல் இருப்பவன்;
ஏகரசமாய்ச் சிவ போகரசம் புசிப்பவன்! (பூரண)

ஸாத்வீக ராஜஸத் தாமஸ குணங்களின்
சண்டைசச் சரவெல்லாம் சாட்சியாய்க் காண்பவன்;
ஆத்ம ஸாக்ஷாத் காரத்தால் அனைத்துந் 'தான்' என்பவன்;
ஆழக்கடல்போலவே அமைதியாய் இருப்பவன் (பூர)

## 72. அடக்கியாளவே வேண்டும்

கரகரப்ரியா ராகம்] [திரிபுடை தாளம்

பல்லவி

அடக்கி யாளவே வேண்டும் - ஐந்து புலன்களையும்
அடக்கியாளவே வேண்டும்...மனிதா நீ (அடக்கி)

அநுபல்லவி

துடுக்குத் தனமாகத் துள்ளித் துள்ளிக் குதித்துத்
துக்க விஷயங்களிற் சிக்கி யலையாமல் (அடக்கி)

சரணம்

ஆசை யூறும் பொருளிற் பாசம் வைக்காமல்,
ஆவணப் பேயின்கை அகப்பட்டு விழிக்காமல்,
தேசமெல்லாம் சிவப்ர காசமாகப் பூத்து,
நிற்குண ஞானமாம் பொற்கனி பழுத்திட (அடக்கி)

## 73. ஆராய்ந்து பார்

சாரங்கா ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

ஆராய்ந்து பார் மனிதா—
'நான் யார்?' என்றே... (ஆ)

அநுபல்லவி

பூராய மாகவுட் பொருள் 'அது' எது வென்றே (ஆ)

சரணம்

கண்ணில் இருந்துலகைக் காண்பதெது வென்றே (ஆ)
நாவி விருந்து சுவை நயப்பவன் யாரென்றே (ஆ)
உள்ளத்தி லேயொளிந்த உண்மை எது வென்றே (ஆ)
இதயத்தில் துடித்திடும் இன்பம் எதுவென்றே (ஆ)
அறிவும் அறிபொருளும் அறிவோனும் யாரென்றே (ஆ)
உயிர்க்குயி ராய்க்கலந்த உத்தமன் எவனென்றே (ஆ)

## 74. இதயக் கதவை

குந்தலவராளி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

இதயக் கதவைத் திறந்தருள்
ஈசனே, அன்பர் நேசனே—என் (இத)

அநுபல்லவி

பதமலரி லே வாழ்வின் பாரத்தை வைக்கவே
சுதந்தர மாக வுன் சுகத்தினிற் சொக்கவே (இத)

சரணம்

காரினை உலுப்பிடும் காற்றினைப் போலவே,
கமலத்தை மலர்த்திடும் கதிரொளி போலவே,
பூரண மாகவுன் பூங்கரத் தாலே,
புண்ணிய னே, கா ருண்ணியனே—என் (இத)

இருள் மன மாயஞ்செய் இருவினை நலியவே,
இகபர சுகமிந்தச் சகமெல்லாம் பொலியவே,
அருட்பெருஞ் சோதிசுத் தானந்தம் பொழியவே,
அன்புவெள்ளம் பெருகி ஆருயிர் செழிக்கவே!
(இத)

## 75. சத்திய ஜோதியை

காபி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

சத்திய ஜோதியை பக்தி செய்வோம் வாரீர்
ஸமரஸ ஸன்மார்க்க சபையினிற் சேரீர் (சத்)

அநுபல்லவி

சித்த சலன மின்றி தியானத்தில் ஊன்றி
சிந்தனைக் கமுதமாய் வந்துவந் தினிக்கும் (சத்)

சரணம்

சாதிமதபேத சாத்திர கோத்திரச்
சண்டைகளை விடுத்துச் சாதனத்தாலே,
ஆதிப் பரம்பொருளின் அருளினை நாடியே
ஆத்தும நேயத்தில் அனைவரும் கூடியே... (சத்)

## 76. வருந்தருணம் இதுவே

**பிலஹரி ராகம்]** [**ஆதி தாளம்**

பல்லவி

வருந்தருணம் இதுவே—அருட் பெருமான் ; (வ)

அநுபல்லவி

தருண மழை போன்ற
தனிப்பெருங் கருணையாய் (வ)

சரணம்

சுத்தசன் மார்க்கத்தில் இத்தல மெல்லாம் வாழ (வ)
போர்வெறிக் கொடுமைகள் பூண்டுடன் ஒழிந்திட (வ)
இருட்சாதி சமயங்கள் இன்றுடன் சென்றிட (வ)
அகங்கார மாயங்கள் அழிந்தருள் பொழிந்திட (வ)
அசுரபயம் விலகி அமரானந்தம் பொலிய (வ)

## 77. சகல கலா வாணியே

**கேதார ராகம்]** [**ஆதி தாளம்**

பல்லவி

சகல கலா வாணியே—சரணம் தாயே!
சங்கீத வீணா பாணியே! (சகல)

அநுபல்லவி

இகமும் பரமும் நல்ல சுகமளிக்கும் கல்வியை,
எங்களுக் கருளுவாய்
மங்களச் செல்வியே! (சகல)

சரணம்

அறம் பொருள் இன்பமும், ஆற்றலும், ஆயுளும்,
ஆத்தும ஞானமும் பூத்துப் புகழ் சிறந்தே,
திறம்பெற்ற தீரராய்த் திருவுடை வீரராய்த்
தேசநலம் புரியும் திவ்ய வரந் தருவாய் (சகல)

முதுபெரும் புலவரும், முனிவரும் போற்றிய
* முப்பொருள் அறிவுடன் இப்போது விளங்கிடும்
புதுப்புதுக் கலைகளும், பொருள்களும் அறிந்திங்கே
பூரண ராகவாழும் புண்ணியம் அருளுவாய் (சகல)

---

* முப்பொருள் : பதி, பசு, பாசம், அல்லது கடவுள், உலகம், ஆன்மா.

## 78. எழுந்திரு கல்யாணி

பூபாள ராகம்] [திரிபுடை தாளம்

பல்லவி

எழுந்திரு கல்யாணி—ஓம்சுத்தசக்தி யெம்
இதயத்தில் உபசாந்த உதயத்தைத் தூண்டி (எழு)

அநுபல்லவி

அழுந்திருள் ஒழிந்திடச்
செழுஞ்சுடர் பொழிந்தெங்கள்
ஆதார கமலத்தின்
மீதேறிப் பொழிந்திட (எழு)

சரணம்

விண்முகம் கனிந்தது, விடிந்தது காலை ;
வீங்கிருள் அகன்றது, தூங்கின குமுதம் ;
தண்முகம் அருணத் தணல்முகம் ஆனது ;
தடங்களில் விரிந்தன தாமரை யெல்லாம் ;
மண்முகம் புதுப்பசும் பொன்முக மாகிட,
மங்கலச் செங்கதிர் மலர்ந்தது வானில் ;
எம்முகம் பார்த்தருள் புரிவதற் கெண்ணி
எழுந்தருள் இத்தினம் இன்பக் கொழுந்தே (எ)

ஆர்வமென்னும் சேவல் கூவுதுன் அருளை,
அன்புள்ளம் பாடுதுன் ஆடலின் பொருளை ;
கார்வரக் காணும் கலாபத்தைப் போலுன்,
கருணை முகங்கண்டு களித்ததெங் கண்ணே ;
சூரிய ஜோதிசேர் தாரகை போலுன்,
சுடரினில் ஒன்றுரும் சுகநிலை தருவாய் ;
பாரெல்லாம் உன்முகம் பார்த்திட அருளாய்,
பரம சிவானந்தம் பாலிக்கும் திருவே— (எழு)

## 79. வீரவுறுதி தருவாய்

கானடா ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

வீரவுறுதி தருவாய்—பராசக்தி
வெற்றிமிகத் தருவாய் (வீர)

அநுபல்லவி

பாரெல்லாம் உன்னருட்பண்கள் பொழியவே
போர் செய்யும் மனமாயப் பொய்கள் ஒழியவே (வீர)

சரணம்

கோர நிருதர் செய்யும் கொடுமைகள் அழியவே,
பூரண சுதந்தரம் புன்னகை புரியவே (வீர)

எனதியான் என்கின்ற இறுமாப்பு நலியவே,
மனைதொறும் பொதுநல வினைநலம் பொலியவே (வீர)

தாயின்றிச் சேயில்லை; தரையின்றிப் பயிரில்லை;
நீயின்றி யாமில்லை; நின்னைப் பிரியாத (வீர)

தேசமும் நீயே; எந் தெய்வமும் நீயே;
பாசமும் நீயே; எங்கள் பந்தனை சிந்திட (வீர)

தீரராய் உன்னருள் செழித்து ஞானம் பழுத்தே
பூரண சித்தராய்ப் பாரினில் வாழ்ந்திடவே (வீர)

## 80. ஆனந்த நடனமாடினுள்

கேதார ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

ஆனந்த நடன மாடினுள்—சச்சி
தானந்த நடன மாடினுள்—பராசக்தி (ஆனந்த)

அநுபல்லவி

வானும் புவியும் வணங்கி மகிழ்ந்திட
ஞான வெளியினில் வீணை 'ஓம், ஓ'மென (ஆனந்த)

சரணம்

பஞ்ச பூதங்கள் முழங்கக்—குணங்கள்
பாய்ந்து தாளம் வழங்க...
அஞ்சு தொழிலுந் துலங்கக்—காலம்
அதிரப் புவிகள் குலுங்க...
தஞ்சந் தஞ்சமென்றுள் ளன்பர் முறையிடத்
தந்தாம், தந்தாம்,
தாகிட தகதீம் என்ன... ஆனந்த)

THE MADURA TAMIL SANGAM

கலியரக்கர்கள் வீழ—மீண்டும்
க்ருதயுகத் தேவர் வாழ...
பொலியு நலங்கள் சூழ—மங்களப்
புதிய வாழ்க்கை பொங்க...
சலிப்பில் லாமல் சதாசிவ னுடன்
ததிங்கிணதோம், ததிங்கிணதோம்,
தளாங்கு தரிகிட தோமென (ஆனந்த)

## 81. தரிசனம் செய்திடுவோம்

**பிலஹரி ராகம்]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

தரிசனம் செய்திடுவோம்—ஜகன்மா தாவை
'சக்தி ஓம், சக்தி ஓம்' என்று வணங்கி நின்றே (தரி)

**அநுபல்லவி**

பரமசுகானந்தம் பாலிக்கும் அன்னையை,
பவ்ய ஜனங்களெல்லாம்—திவ்ய ஜீவனம் பெறத் (தரி)

**சரணம்**

அருண நகை முகமும், கருணைபொழி யகமும்,
அஞ்சலி யளித்திடுஞ் செஞ்சுடர்க் கரங்களும்,
மரண பயமொழிக்குங் கிரண விழிக்கனலும்,
மங்கல சாந்தமும் பொங்கு மஹேச்வரியைத் (தரி)

வான்வெளி இடமெல்லாம், கான்மலர் வனமெல்லாம்,
வளம்பெறுங் கோயிலாய் விளங்கும் அருட்சுடரை,
நானென வுயிர்தொறும் நடம்புரியும் அறிவை,
நாதவிந்து கலையாம் ஆதி பராசக்தியைத் (தரி)

அருவிகளுடன் சோலைக் குருவிகளுடன் பாடி,
ஆனந்தக் கூத்தாடி, அன்புடன் கொண்டாடி,
இருவகை மனத்தினை ஒருமையுள் ளடக்கியே
இதய மலரிலும் இன்னுயிர் உலகிலும் (தரி)

## 82. எங்கும் நிறைந்த பொருளே

பைரவி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

எங்கும் நிறைந்த பொருளே—பரமாத்மனே
எல்லார்க்கும் இன்பம் அருளே (எங்)

அநுபல்லவி

பொங்கும் உயிர்க்குபிராய்த்—தங்கும் சச்சிதானந்த
போத ஸ்வரூபனே, வேத ஹ்ருதயனே (எங்)

சரணம்

ஞாலமெலாமுன் சக்தி நாடகசாலை,
நானுவினை யெல்லாமுன் ஞானமிர்த லீலை,
காலத்திலே ஊர் கோலம்வரும் உனது
காட்சியைக் கலைசெய்யக் கருணை புரிவாயே (எங்)

## 83. ஒன்றும் கவலையில்லை

கரகரப்பிரியா ராகம்] [ஆதி தாளம்

(கண்ணிகள்)

ஒன்றும் கவலையில்லை என்றும்பே ரின்ப முண்டு
ஓம்சுத்த சக்தியென்று சொல் சொல் சொல் சொல்—
மனமே!
கன்றை விரும்பும் தாய்போல் வந்து நம்மை ரக்ஷிப்பாள்
கருணம்பி கை யருளிற் செல் செல் செல் மனமே—
(ஒன்றும்)

தீனர் கற்பகமான செல்வத் திருமகளின்
செங்கதிர் முகமெங்கும் காண் காண் காண்—மனமே!
மோன வெளியில் வள்ர் ஞான மஹேச்வரியின்
முத்தித் திருவடியைப் பூண் பூண் பூண்—மனமே
(ஒன்றும்)

இருவினை யுலகத்தின் இடர்களெல் லாம்விலக
என்றும் ஜயகாளியை எண், எண், எண்—மனமே!
அருளோதய யம்போற் சாந்தம் பெருகிட வாழ்வினிலே
அகிலாண் டேச்வரி பக்தி பண், பண், பண்—மனமே
(ஒன்றும்)

சுத்த சச்சிதானந்த ஜோதி பரா சக்தியைத்
தூய வுள்ளத்திற் சிந்தை செய் செய் செய்—மனமே!
பக்திப் பரவசத்தால் சித்தியெல் லாங்கை கூடும்
பரமானந்தம் பெறுவாய், மெய் மெய் மெய்—மனமே!
(ஒன்றும்)

## 84. சக்தியை வணங்கிடுவோம்

புன்னாகவராளி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

சக்தியை வணங்கிடுவோம்—ஜய்
சக்தியை வணங்கிடுவோம் (சக்தி)

அநுபல்லவி

சுத்த சுதந்தர ஜோதி பராம்பிகை (சக்தி)

சரணம்

நின்மலர் நெஞ்சினிலே—வீர
நெருப்பெனப் பளிச்சிடுவாள்—அவள்
பொன்னடி சூடிடுவோம்—அன்னை
புகழினைப் பாடிடுவோம்! (சக்தி)

தோள்வலி மிகத்தருவாள்—அன்பர்
துயர்கெடத் துணைவருவாள்...
தாள்பணிந் தேத்திடுவோம்—தெய்வத்
தாய்நம்மைக் காத்திடுவாள்!
அச்சத்தை யொழித்திடுவோம்—சக்தி
அருளினிற் குளித்திடுவோம்!
உச்சமாய்ப் பாடிடுவோம்—தூய
உள்ளத்திற் கூடிடுவோம்—பரா (சக்தி)

## 85. சாரதா தேவியே

அம்ருதவாஹினி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

சாரதா தேவியே—தீரரின் ஆவியே,
சரணம் குருதேவி—தாயே... (சார)

அநுபல்லவி

பூரண வேதமே - புனிதமெய்ப் போதமே,
புண்ணியப் புலவரெல்லாம்
போற்றுகின்ற ஜோதியே... (சார)

சரணம்

புன்னகை பொங்கிடும் பொலிமுகம் காட்டுவாய்;
பூந்தளிர்க் கையினுல் தீந்தமிழ் ஊட்டுவாய்;
அன்னையே, பரிசுத்த சின்மய ரூபியே,
அன்புமலர் கொண்டுனது
பொன்பதம் வணங்கினேன்... (சார)

## 86. பாதம் பணிந்தேனே

கமாஸ் ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

பாதம் பணிந்தேனே,
பாரததேவியே—தாயே (பாத)

அநுபல்லவி

ஆதியந்தமிலா...நாதப்ரம்மமே,
துணை செய்தருள் வினை தீர்த்தருள்
சுந்தர வடிவே—தாயே... (பாத)

சரணம்

ஆத்ம சக்தர் ஜீவன் முக்தர் அருட்பணி புரிய,
அமர வாழ்வு பெருகியுலகில் ஆனந்தம் பரவ,
சாத்வ ரூபியே, தாயே - சக்தி தேவியே,
சரணம் - இது தருணம் - திருக்
கருணை செய்குவாய்—அம்மா... (பாத)

## 87. கோயில் உலகெல்லாம்

அடாணு ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

கோயி லுலகெல்லாம்—எங்கள்
கோமள வல்லி குவலய ராணிக்கே (கோயி)

அநுபல்லவி

நேய மிகுந்திடும் தூயவர் அங்கத்தில்,
நித்திய முக்தரின்
சத்திய சங்கத்தில் (கோயி)

சரணம்

எங்கும் உடல்கொண் டுலாவும் உயிரினில்,
இயற்கைப் பயிரினிலே...
தங்கும் மலையினில், தவம்வளர் குகையினில்,
தவழும் நதியினிலே...
திங்களிற் பொங்குந் திரைகடல் வெள்ளத்தில்,
செங்கதிர் உள்ளத்திலே...
மங்கல மாக விளங்கிடும் அன்னை
மஹாசக்தி கௌரி
மனோன்மணி அம்மையின் (கோயி)

## 88. ஜெயஜெய சுத்தசக்தி

செஞ்சுருட்டி ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

ஜெயஜெய சுத்த சக்தி ஓம் என்றே
தியானம் செய்வோம் ஞானம் பெருக (ஜெய)

அநுபல்லவி

பயம் பிணி துயர் பட்டென் றொழியும்
பரமா னந்த அமுதம் பொழியும்... (ஜெய)

சரணம்

தன்னலத்தினைத் துறப்போம்—புவித்
தாய்நலஞ்செய உயிர்ப்போம்;
இன்னல் வரினும் புன்னகையுடன்
எடுத்த வினையை முடித்து மகிழ்வோம்... (ஜெய)

வேற்றுமைகளை ஒழிப்போம்—ஆத்ம
வீரராகத் தழைப்போம்;
மாற்று யர்ந்தவிஞ் ஞானச் சுடரில்,
மனதை வாட்டிப் புனித ராவோம்... (ஜெய)

தீரராகமுன் செல்வோம்—சக்தி
திருவருளினால் வெல்வோம்;
பூரணநர நாரணராகப்
புதிய போக யோக மோங்க... (ஜெய)

## 89. வந்தே மாதரம்

பியாகு ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

வந்தேமாதரம்—வந்தேமாதரம்
என்று வணங்கிடுவோம்—ஒன்ருய்
நின்று வணங்கிடுவோம்......

அநுபல்லவி

தந்துடல்பொருள் ஆவி—தாரக மாகிய
சக்தி பவானியை—பக்த ஜனங்க ளெல்லாம் (வந்தே)

சரணம்

அழகெனும் கோயிலில், அறிவொளி துலக்கியே
அன்பு மலர் தூவி, ஆர்வங்களைக் கூவி,
குழல்வீணை மத்தளம் குரலுடன் முழங்கவே
குயிலெனப் புகழ்பாடி மயிலெனக் கூத்தாடி (வந்தே)

வாய்மையும் வீரமும், வளமையும் இளமையும்,
வளர்தவ யோகமும், அளவறு போகமும்,
தாய்மன நேயமும், சேய்மனத் தூய்மையும்,
சாதிபேத மின்றிச் சகலரும் அடைந்திட (வந்தே)

பந்தனை சிந்திச் சுதந்தர வரம்பெற,
பயமின்றித் தருமத்தைப் பாலிக்கும் திறம்பெற,
சந்ததம் பேரின்பந் தந்திடுங் கலைபெறச்
சாந்தசிவ மங்களம் வாய்ந்த நிலைபெறவே (வந்தே)

## 90. பரிபூர்ண சுதந்தர

இந்துஸ்தான் கமாஸ்] [ரூபக தாளம்

பல்லவி

பரிபூர்ண சுதந்தர வரம்வேண்டும் அன்னையே (பரி)

அநுபல்லவி

விரிவான விண்ணிலே விளங்கும் ஆகாயம்போலே
பிரியாத ஸ்வரூபத்தில் அறிவாகி நின்றிடப் (பரி)

சரணம்

ஒருநொடி யின்பமும் ஓயாத துன்பமும்,
பெருகும் இருவினையின் பேதமை யில்லாத (பரி)
கட்டடி மைத்துயரை வெட்டி யெறிந்து மனப்
பற்றறத் துறந்து சுக முற்ற ஞானதீரனும் (பரி)
மோகாந்த காரத்தில் மூழ்கி யழியாமல்,
ஏகாந்த மோனத்தில் இருந்த படியிருக்கப் (பரி)
சுத்தசச் சிதானந்தத் துரிய வள நாட்டில்
சித்த ருடனே ஜீவன் முக்தனாய் வாழ்ந்திடும் (பரி)

## 91. எந்தாய் வாழ்கவே !

ஹம்ஸத்வனி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

எந்தாய் வாழ்கவே,
எந்தாய் வாழ்கவே—சக்தி (எந்)

அநுபல்லவி

சந்ததம் அன்பரின்
சிந்தையில் விளங்கிடும்... (எந்)

சரணம்

தேனினும் பாலினும்
வானமு தத்தினும்
கான ரசம் பொழி
ஞான கலாநிதி... (எந்)

கூற்றையும் வீழ்த்திடும்
ஆற்றலும் ஆயுளும்
ஏற்றமும் நல்குவாள்
போற்றி மஹாகாளி... (எந்)

பூரண யோகமும்
பூரண போகமும்
தீரமும் தந்தருள்
தாராக மாகிய... (எந்)

மண்ணக வாழ்வினில்
விண்ணமு தம்பொழி
தண்ணருள் செய்யும் முக்
கண்ணன் பராசக்தி... (எந்)

## 92. போற்றி செய்வோம்

பேஹாக் ராகம்] [ஆதி தாளம்

போற்றி செய்வோம்; புதுமலர் தூவி,
புண்ணியப்புகழ் பாடிப் பணிவோம்!
நாற்றி சைக்கலை வாணரும் கூடி,
நமது தாய்த்திருத் தொண்டுகள் செய்வோம் (போ)

வேத வாணியும் பாரத தேவி,
வீர துர்க்கையும் பாரத தேவி,
மாத வக்கனல் பாரத தேவி,
மங்க லத்திரு பாரத தேவி... (போற்)

சேது தொட்டிம யம்வரை நீண்ட
தெய்வ நாட்டினள் பாரத தேவி,
மோது தென்கடல் முன்வளர்ந் தோங்கும்
மூல சக்தியும் பாரத தேவி... (போற்)

வீரர் வீரமும் பாரத தேவி,
விஜய லட்சுமி பாரத தேவி,
பாரின் அன்னையும் பாரத தேவி,
பாது காவலும் பாரத தேவி... (போற்)

கோடி கோடிச் சிரங்கள் வணங்க,
கோடி கோடிக் கரந்தொழு தேத்தக்
கோடி தேவர்கள் ஆசிகள் கூறக்
கொலு விருப்பவள் பாரததேவி! (போற்)

## 93. சிவசக்தி, ஜயகாளி

ஆபேரி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

சிவசக்தி, ஜயகாளி, ஜயலக்ஷ்மீ வாணி
ஜகதீஸ்வரீ ஓம் சரணம்—ஸ்ரீவர தாம்பிகே (சிவ)

அநுபல்லவி

நவராத்திரி கொலுசேவை செயுமன்பர் எல்லாம்
தவமுந் திருவுந் தனமும் மிகவோங்கித்
தழைத்திட அருள்வாய் (சிவ)

சரணம்

உலகினில் உயிரஞ்சக் கலகஞ்செய் துன்னும்
கொலைபாவி அசுரரின் கொடுமையைத் தீராயோ?
அலைமோதும் துயரைவே றுரிடம் முறையிடுவோம்?
அபயம் அபயம் அபயம் ரணசண்டி—
அருணோதய சுந்தரி (சிவ)

## 94. ஜயஜயஜய....ஜயஹே

(திருக் கொலு)

அமீர்கல்யாணி ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

ஜயஜயஜய ஜயஜயஜய ஜயஜயஜயஹே! (ஜய)

அநுபல்லவி

துயரினியில்லை பயமினியில்லை
சுதந்தரசக்தி இதந்தருகின்றாள்... (ஜய)

சரணம்

மங்களத்திரு மதிமுகத்தினில் வளநகை குலுங்க,
அங்கையில் அறச் செங்கோ லேந்தி
ஆத்ம சக்தி யரசி வந்தாள்... (ஜய)

ஞான மகுடந் தேவர் சூட்ட, ஞாலமெல்லாம் போற்ற,
சேனை வீரர் முரசொலித்திடத்
திருக்கொலுவிருந் தாள் பராசக்தி... (ஜய)

எட்டுத் திசையும் வெற்றி முழக்கம் எதிரொலி பரவ,
கட்டுகள் விடு பட்டுப் பேரின்பக்
கதிர்பரவினள் புதுயுக சக்தி... (ஜய)

## 95. தாயே சரணம்

இந்துஸ்தான் பைரவி] [திஸ்ர ஏகதாளம்

தாயே சரணம் ஜய சக்தி—யோகத்
தணலை யருளும் மஹா காளீ!
நீயே தாரகமென் றறிந்து—நிதம்
நினைந்து நினைந்துருகிப் பணிந்தேன்... (தாயே)

மேகக் காரிருளைப் பிளந்தே—விண்ணில்
மின்னிக் கடகடெனச் சிரிப்பாய்;
மோகக் காரிருளைப் பிளக்க—உன்
மூலக் கனலொளியை வீசாய்... (தாயே)

வட்டக் குளிர்மதியைப் போலே—என்
வாழ்விற் கமுதநில வளிப்பாய்,
பட்டப் பகலொளியைப் போலே—நான்
பார்க்கப் பரிவுடனே வருவாய்... (தாயே)

வானத் தமுதரசம் வழங்கி—நர
வாழ்வை அமரகவி யாக்காய்,
ஞானத் திருவருளைப் பெய்வாய்—இந்த
ஞாலம் புதுமைபெறச் செய்வாய்... (தாயே)

## 96. மாதங்கி சரணம்

நாட்டை ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

மாதங்கி...சரணம்—சங்
கீதாங்கி...சரணம்—ஜய (மா)

அநுபல்லவி

நாதஸ்வ ரூபிணி—சக்தி
நாரணி—சகலகலா பரி—பூரணி (மா)

சரணம்

தேனும் பாலும் அமுதும் கனி ரசமும்போல்
திவ்ய சாரீரந் தருவாய்!
கான சுகத்தினல் மானிட வாழ்க்கையின்
கவலையை மாற்றிட வருவாய்!
திருவே, கலையின்
உருவே, வித்யா
குருவே, கற்பகத்
தருபோ லுதவும்... (மா)

## 97. தாயே சிவகாமி

நாதநாமக்கிரியை ராகம்] [சாபு தாளம்

பல்லவி

தாயே சிவகாமி, நீயொரு வார்த்தை சொல்லத்
தயவுசெய் தருணமிதே! (தாயே)

அநுபல்லவி

சேயேன் படுந்துயரை நீயேயெடுத் துரைத்தால்,
தில்லையப்பன் அருள்
இல்லை யென் ருகுமோ? (தாயே)

சரணம்

எல்லை யில்லாவுலகில் தொல்லைகள் ஒருகோடி!
எப்படி யிதையெல்லாந் தப்புவ தென்றறியேன்
பொல்லாமனப் பகைவர் கொல்லுகின்ற ரம்மா,
பொன்னம்பலத் துரை என்னிலை கண்டிரங்கத்
(தாயே)

## 98. தடதடவென

மாண்டு ராகம்] [ஏக தாளம்

பல்லவி

தட தடவென ருத்ரசண்டி
தாண்டவம் புரிந்தாள்—ஊழித்
தாண்டவம் புரிந்தாள்! (தட தட)

அநுபல்லவி

கடகடவெனக் கார்புயலிடி
கலந்து சுற்ற மின்னல் வெட்டத் (தட தட)

சரணம்

சடசடவெனத் தகதகவெனச் சுடர்கள் வீழவே,
படபடவென ஊழிநெருப்பின் பாட்டு வீறவே,
மடமடவெனப் பழையகொடுமை மடிந்து போகவே
இடியிடியென இரத்தச் சிரிப்பால்
இருள் நடுங்க இகலொடுங்கவே (தட தட)

## 99. சிவசக்தி தாயே

சண்முகப்பிரியை ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

சிவசக்தி தாயே—ஜயம் அருள் வாயே (சிவ)

அநுபல்லவி

தவசக்தி மிகத் தந்து மனமுவந்தே (சிவ)

சரணம்

சமதமஉபரதி திதிக்ஷையும்,
தியான தாரணசமாதி சாதனமும்,
நமனையும் வெல்லும் ஞானமும் தந்தருள்,
நாதபிந்து கலாதீத ஜோதிஒம் (சிவ)

## 100. பரதேவி ஜயபாரதி

கோகிலத்வனி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

பரதேவி—ஜயபாரதி, வாணி,
பவானி, சிவாம்பிகே ! (பர)

அநுபல்லவி

வரதாம்பரா—ஞான
வாரிதியே சரணம், பரிபூரணி ! (பர)

சரணம்

சுத்த சுதந்தர
ஜோதிப்ரம் மானந்த
சித்தி யளித்தருள்
சக்தி மஹேச்வரி... (பர)

## 101. சகல பாக்யமும்

லதாங்கி ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

சகல பாக்யமுந் தருவாய்
சௌந்தர்ய லக்ஷ்மி... (சக)

அநுபல்லவி

இகபரசுகா னந்த மான (சுக)

சரணம்

கர்ம சித்தி, ஞான சித்தி,
காய சித்தியும்,
தர்மார்த்த காம மோக்ஷ
சதுர்விதபுரு ஷார்த்த மான (சுக)

## 102. எத்தனை இன்பங்கள்

வராளி ராகம்] [ஜம்பை தாளம்

பல்லவி

எத்தனை இன்பங்கள் வைத்தனை—தாயே
இந்த இயற்கை யுலகினிலே... (எத்)

அநுபல்லவி

அத்தனை யின்பம் புசித்திடின்—வாழ்க்கை
ஆனந்தக் காவியம் ஆகுமே! (எத்)

சரணம்

முத்தைப் பரப்பிடும் வானத்தில்—வளர்
மோகனச் சந்திரன் மோனத்தில்,
நர்த்தனம் ஆடிடும் மின்னலில்—அம்மா
ஞானமணித் திரள் மின்னுதே! (எத்)

பொன்மயக் காலை முகத்திலே—கதிர்
பூத்துச் சொலிப்பதைக் கண்டதும்,
என்னுளத்தில் அருள் ஊறுதே - அதில்
இன்ப மணவெறி யேறுதே!—அம்மா (எத்)

## 103. ஆசீர்வாதம் தருவாய்

ஆரபி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

ஆசீர்வாதம் தருவாய்—ஜகதீஸ்வரி
அன்புப் புன்னகை புரிவாய்... (ஆசீர்)

அநுபல்லவி

தேசு லாவுந் திருச் செந்தா மரைக் கையால்
தீரக் கனல் பெருகிப் பூரணம் பொலிந்திட (ஆசீர்)

சரணம்

சித்த சலனங்களை ஒழிப்பாய்—எம் உள்ளத்தில்
திவ்யப்ர காசமாய்ச் செழிப்பாய்;
சுத்த சுதந்தரம் கொடுப்பாய்—எம் மனத்தினைத்
துண்டுசெய் மாயத்தைத் தடுப்பாய்...
சத்திய ஜோதி—ஜீவன்
முக்தி—சச்சிதானந்த
சித்தி விளங்க—யோக
சக்தி மிகப் பொழிந்துன் (ஆசீர்)

## 104. வரமெனக் கருள்வாய்

இராகமாலிகை] [ரூபக தாளம்

சாமா

வரமெனக் கருள்வாய்—பராசக்தி
வரமெனக் கருள்வாய்—தாயே
சரண மாமலர்க் கோயிலில் என்மனம்
இரவும் பகலும் இருந்து மகிழ்ந்திட... (வர)

கல்யாணி

அறிவொளி தருவாய்—பராசக்தி
அமரவாழ் வளிப்பாய்;
ஆயுள் முழுதும்உன் அன்புக் கலையினில்,
தோயும் சுகமே சுகமெனக் கொண்டனன்... (வர)

பூர்வ கல்யாணி

திடமனமருள்வாய்—பராசக்தி
உடலுறுதி யருள்—தாயே
என்றுமுன் எண்ணத்தில் ஊறிக் கவலையை
வென்றுன் அருள்வழி நின்று செழித்திட.... (வர)

காம்போதி

வைரிகளை வெல்ல—பராசக்தி
தைரியம் அருள்வாய்—தாயே
பாரில் அதர்மப் பதர்களைப் போக்கியே
சீரிய தெய்வ குலத்தினை ஆக்கிட.... (வர)

## 105. சத்தியம் வெல்லும்

(காவடிச் சிந்து)

செஞ்சுருட்டி ராகம்] [ஜம்பை தாளம்

சத்தியம் வெல்லும், தருமம் தழைத்திடும்,
தைரியமா யிருப்போம்;
சுத்த சுதந்தர ஜோதி பராசக்தி
தொண்டரைக் காத்திடுவாள்!

உள்ளத்தில் கீதையும், வள்ளுவர் வேதமும்
ஊன்றிப் பணி புரிவோம்;
கள்ளப் பகைவர் கனலை யணைக்கக்
கருணைக் கடலுடையோம்!

கொள்ளையடித்துக் கொழுத்த பகாசுரர்
கொட்டத்தை வெட்டெனவே
பிள்ளை விளையாட்டாய்க் கிள்ளி யெறியப்
பெரிய பலந் தருவாள்!

எட்டுத் திசையும் அதிர ஜயபேரி
கொட்டி யெழுந்திடுவோம்;
வெட்டுமின் போலநம் வீரத்தி னுக்கவள்
வேக மளித்திடுவாள்!

## 106. உன்னைச் சரண்

தோடி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

உன்னைச் சரண் புகுந்தேன் கண்ணு—நீயென்
உயிர்க்குயி ரென்றே யறிந்தேன்! (உன்னை)

அநுபல்லவி

என்னிதய மாகும் இனியப்ருந் தாவனத்தில்,
இஷ்டப் படிக்குநீ இருந்து விளையாடுவாய் (உன்னை)

சரணம்

எத்தனை யசுரர்கள் எதிர்த்து வருத்தினுலும்
இமைநொடியில் அவரை எமபுரம் அனுப்புவாய்;
பக்தரைப் பரிவுடன் பாலிக்க வருவாய்;
பாரெல்லாம் பணிந்திடும் சீரிய குருவே! (உன்னை)

இருவினைப் போர்செய்யும் குருநிலத்தில் விஜயன்
ஏறுபோல் எழுந்திடக் கூறிய கீதையைத்
திருவுடன் போற்றிநான் திவ்யஜீவனம் பெறச்
சித்தம்வைத் தருள்ஜீவன் முக்தர்பணி தெய்வமே!
(உன்னை)

## 107. அருவெனலாமே

வாசஸ்பதி ராகம்] [ஆதி தாளம்

(திருப்புகழ்)

[தனதனதான—தனதனதானு
தனதனதானு-தனதானு]

அருவென லாமே,
அரனென லாமே,
அரியென லாமே—திருவாகும்,

உருவென லாமே,
உலகென லாமே,
உளமென லாமே—உபதேச

குருவென லாமே,
குணமென லாமே,
குகனென லாமே—விளையாடும்,

அருளென லாமே,
அறிவென லாமே,
அழகென லாமே—நடராஜன்!

## 108. அதுவிதுவெனுமல்

செஞ்சுருட்டி ராகம்] [ஆதி தாளம்

### (திருப்புகழ்)

[தனதன தனன தனதன தனன
தனதன தனன—தனதான]

அதுவிது வெனுமல்,
அகமொ டலையாமல்,
அரனை மறவாமல்—மனமேநீ

எதுபொரு ளெனுமல்,
இதயவெளி காணும்,
இதுபொரு ளிதேயென்—றறிவாயே,

பொதுநடன ஜோதி
புனித சிவயோகி
புவன குருசாமி—ஸஹஸ்ரார

பதுமமலர் வாசன்,
பசுபதி சபேசன்,
பகவதி சமேதன்—அருள்வானே!

## 109. முன்னிலும் முன்னவன்

(தேவாரப் பண்—கொல்லி)

முன்னிலும் முன்னவன்; பின்னிலும் பின்னவன்;
என்னவன்; உன்னவன்; எங்குமே ஒன்றவன்;
உன்மனிக் கப்புறம் உள்ளபொன் அம்பலம்
தன்மனை கொண்டவன், தத்துவாதீதனே!

கள்ளமா மாயவெங் கானலை நீரெனத்
துள்ளுமா மனதினைத் துள்ளறக் கட்டினால்,
வெள்ளமாக் கருணையாய், விண்ணொளிர் சோதியாய்,
உள்ளமா மன்றிலே உள்ளெழுந் தாடுவான்!

பன்னிலை யுலகினைப் பார்ப்பறப் பார்ப்பவன் ;
உன்னலொன் றற்றவன் உன்னுதற் கானவன் ;
தன்னிலை நின்றருட் சக்தியாம் ஆணையால்,
மூன்னிலை யுலகிலே முத்தொழில் புரிபவன் !

பண்களாற் பாடுவோம், பணிகளாற் போற்றுவோம் ;
எண்ணுவோம் ஈசனை ; எண்ணறக் கூடுவோம் ;
புண்களார் பிறவியைப் போக்கிடும் கடவுளைக்
கண்களாற் காணுவோம் ; காதலாற் கூடுவோம் !

## 110. தில்லை நடராஜனே

பைரவி ராகம்] [சாபு தாளம்

பல்லவி

தில்லை நடராஜனே—சிவகாமி நேசனே
உன்னன்பல்லால்
இல்லை யெனக்கோர் யோசனை (தில்லை)

அநுபல்லவி

அல்லும் பகலுமுன் ஆனந்த நடனத்தை
அகிலமெல்லாங் காணும்
அறிவெனக் கருளுவாய்... (தில்லை)

சரணம்

குஞ்சித பதநிழல் இருப்பேனே—அதைக்
கொஞ்சிக் கொஞ்சித் தமிழ் சுரப்பேனே !
அஞ்சல் எனுங் கரத்தால் ஆசிபெற் றுன்சக்தி
ஆடலில் அனுதினங்—கூடி மகிழ்வேனே !
(தில்லை)

## 111. ஜீவப்படகை ஓட்டும்

ஆனந்தபைரவி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

ஜீவப்படகை ஓட்டும் தேவ தேவனைநம்பிச்
சித்தங் கலங்கா திருப்போம்—மனமே! (ஜீவ)

அநுபல்லவி

நாவாயிரம் எழுந்து, கூவிப் புரண்டலைந்து,
தாவும் வினைக்கடலில் மேவுங் கருணை கொண்டே (ஜீவ)

சரணம்

துக்கக் கரும்புயல்கள் எக்கிப் பொருதிடினும்,
திக்குத் திசையறிந்து, சுக்கானைத் திருப்பியே,
பக்குவமாகத் தள்ளிப் பரிந்தருள் துறை சேர்க்கும்
பரம்பொருள் இருக்கையில், பயமில்லை, துயரில்லை! (ஜீவ)

## 112. பண்ணுடன் பணியுடன்

தன்யாசி ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

பண்ணுடன் பணியுடன் பாவனை ரஸத்துடன்
பரமனை யன்பு செய்வோம்—மனமே! (பண்)

அநுபல்லவி

கண்ணுடன் கதிரெனக் கலந்துயிர்க் குயிராகும்,
கடவுளை இதயத்தில் நடமிடும் ஜோதியைப் (பண்)

சரணம்

கானரசாமிருதம் களிப்புடன் உண்டுநம்
கவலையை மாற்றிடுவோம்!
ஈனவிஷயங்களில் நானென் றகங்கரித்தே
ஏகிடாமல், ஆத்ம தாகத்துடன் மனமே (பண்)

## 113. போதும் போதும்

கேதார ராகம்] [ரூபக தாளம்

பல்லவி

போதும் போதும், போதும் என்மனமே—எப்
போதும் சிவனை ஓதி யுணர்ந்தால் (போ)

அநுபல்லவி

வாதும் வம்பும் வழக்கும் சழக்கும்
வளரும் புவியுன் வாழ்க்கை யெல்லாம் (போ)

சரணம்

தஞ்ச மளித்திடும்
குஞ்சித பாதத்தை
பஞ்சாக்ஷ ரத்தாலே
நெஞ்சி லுபாசித்தால் (போ)

## 114. மங்களமாய் வாழ்க!

சுருட்டி ராகம்] [ஜம்பை தாளம்

பல்லவி

மங்களமாய் வாழ்க—உலகெல்லாம்
வான் கருணை சூழ்க! (மங்கள)

அநுபல்லவி

பொங்குக எங்கெங்கும் பொன்னும் பசுமையும்
போகமும் தியாகமும் யோகமும் ஓங்கியே (மங்கள)

சரணம்

கோர கிருதரின் குண்டுப் புகைகளும்,
போரும் பொருமையும் பொய்களும் பொன்றவே...
வீரமும் அத்யாத்ம தீரமும் சாந்தமும்
பாரத சக்தி பரவிப் பொலிகவே! (மங்கள)

மடமை யிருளும், வறுமைத் துயரும்,
அடிமை நரகக் கொடுமையும் தீர்கவே!
கடமையில் வெற்றிக் கதிர்கள் பொழிகவே,
கல்வியும் பல்வகைச் செல்வமும் மல்கவே (மங்கள)

அன்பும் அருளும் அறம்பொரு ளின்பமும்,
ஆற்றலும் ஆயுளும் போற்றிப் பெருகவே,
கண்கள் இரண்டெனப் பண்புடன் கூடிய
காதலர் இல்லறக் கற்பகம் ஓங்கவே! (மங்கள)

சாதிமத நிறச் சண்டை வளர்த்திடும்,
பேத புத்தியின் பிழைகள் ஒழிகவே!
ஆதிப் பொருளின் அருட்பெருஞ் சோதியில்
ஆருயிர் யாவையும் ஒருகுல மாகவே! (மங்கள)

## 115. நலமோங்கி வாழ்க!

கமாஸ் ராகம்] [ஆதி தாளம்

பல்லவி

நலமோங்கி வாழ்க, வாழ்கவே—இந்நாடெலாம்
ஞானவொளி சூழ்கவே! (நல)

அநுபல்லவி

கலையுந் திருவும் சக்திக்
கனலும் பெருகியே (நல)

சரணம்

சண்டை சச்சரவின்றி, சாதிச் செருக்கின்றி,
சமரசக் கூட்டமாய் அமைதியுடனே ஒன்றி,
வண்டுகள் போலே—நல்ல
தொண்டுகள் புரிந்தன்பு
கொண்டு-பரமானந்தம்
கண்டு-திருவருளால்... (நல)

## 116. நல்லவர் திருக்கூட்டம்

(இராகமாலிகை)

நல்லவர் திருக்கூட்டம் ஓங்கவேண்டும் ;—உலகில்
ஞானவொளி வீச வேண்டும் ;
நாடெலாங் கல்விகலை செல்வந் தொழில் வளமை
நாடோறும் ஓங்க வேண்டும் ;
பொல்லாத கோள்பொய் பொறாமைநோ யுடன்மதப்
போராட்டம் ஒழிய வேண்டும் ;
பூமியை இரத்தகள மாக்கிடு மரக்கர்குலம்
பூண்டோடு மாளவேண்டும் ;
எல்லாரும் சரிநிகர் சமானசன் மார்க்கராய்
இன்புற்று வாழ வேண்டும் ;
இன்சொல்லு மீகையும் இரக்கமும் தூய்மையுடன்
இகவாழ்வில் ஓங்க வேண்டும் ;
வெல்லவேண்டும் வாய்மை ; வீரவிடுதலை வேண்டும் ;
விஞ்ஞானம் ஓங்கவேண்டும்...
வேதாந்த முத்தியும் சித்தாந்த சக்தியும்
விரவவரு பரம சிவமே !

திருச்சிற்றம்பலம்

# இராக அட்டவணை


| இராகம் | பாட்டு எண் |
|---|---|
| அசாவேரி | 4 |
| அடாணு | 87 |
| அமீர்கல்யாணி | 31,94 |
| அம்ருதவாஹினி | 85 |
| அரிகேதார கௌளம் | 5 |
| ஆபேரி | 93 |
| ஆரபி | 62,103 |
| ஆனந்த பைரவி | 49,95,111 |
| இந்துஸ்தான் கமாஸ் | 90 |
| இந்துஸ்தான் காபி | 43 |
| இராகமாலிகை | 1,16,56, 104,116 |
| உசேனி | 33 |
| உதயரவிசந்திரிகை | 54 |
| எதுகுல காம்போதி | 67 |
| கண்டா | 64 |
| கமாஸ் | 28,86,115 |
| கரகரப்ரியை | 72,83 |
| கல்யாணி | 47 |
| காபி | 30,60,75 |
| காம்போதி | 11 |
| கானடா | 34,79 |
| கீர்வாணி | 44 |
| குந்தலவராளி | 74 |
| கேதாரம் | 80,113 |
| கேதாரகௌளம் | 51,77 |
| கோகிலத்வனி | 100 |
| கௌளிபந்து | 27 |
| சஹானு | 61 |
| சக்ரவாகம் | 19,58 |
| சங்கராபரணம் | 10 |
| சண்முகப்பிரியை | 99 |
| சலநாட | 14 |
| சாமா | 42 |
| சாரங்கா | 73 |
| சாரமதி | 15 |
| சாவேரி | 48 |
| சிம்மேந்திர மத்திமம் | 21 |
| சுருட்டி | 32,[illegible]9,114 |
| செஞ்சுருட்டி | 12,50,88, 105,108 |
| சௌராஷ்டிகம் | 35 |
| நடபைரவி | 45 |
| நாட்டை | 96 |
| நாட்டைக் குறிஞ்சி | 24 |
| நாதநாமக்கிரியை | 18,97 |
| நீலாம்புரி | 6 |
| தர்பார் | 22 |

# இராக அட்டவணை

| இராகம் | பாட்டு எண் |
|---|---|
| தன்யாசி | 112 |
| தேவகாந்தாரி | 71 |
| தேவாரம்(பண்-கொல்லி) | 109 |
| தோடி | 2,20,30,106 |
| பங்காளா | 9 |
| பந்துவராளி | 39,70 |
| பரசு | 63 |
| பியாகு | 7,89 |
| பிலஹரி | 29,76,81 |
| புன்னாகவராளி | 84 |
| பூபாளம் | 78 |
| பூர்வகல்யாணி | 3 |
| பேஹாக் | 46,53,92 |
| பைரவி | 23,59,82,110 |
| மத்யமாவதி | 26 |
| மணிரங்கு | 52 |

| இராகம் | பாட்டு எண் |
|---|---|
| மாஞ்சை | 13 |
| மாண்டு | 98 |
| மாயாமாளவம் | 40 |
| மாளவி | 17 |
| முகாரி | 57,66 |
| மோகனம் | 8,65 |
| யமுனா கல்யாணி | 68 |
| லதாங்கி | 101 |
| லலிதா | 38 |
| வராளி | 102 |
| வர்சஸ்பதி | 107 |
| விஜயஸ்ரீ | 37 |
| ஸ்ரீராகம் | 25 |
| ஹம்ஸத்வனி | 91 |
| ஜயந்தஸ்ரீ | 41 |
| ஜ[illegible]ஜாவளி | 55 |

சிதம்பர கீதம்

# பாட்டு முதற்குறிப்பு அட்டவணை


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அஞ்சலாமோ நெஞ்சே? | 36 |
| அடக்கியாளவே வேண்டும் | 46 |
| அண்ணாமலை அப்பனே | 21 |
| அதுவிதுவெனாமல் | 67 |
| அந்தநாள் இனிவருமோ | 40 |
| அபயக்கரம் | 34 |
| அபராதங்கள் | 22 |
| அப்பாவுன் பொன்னடி | 11 |
| அருவியைப்போலும் | 6 |
| அருவெனலாமே | 66 |
| அலங்காரம் போதுமடீ | 24 |
| அலையாமற் பாருமையா | 17 |
| அன்பான நெஞ்சிலே | 5 |
| அன்பிருந்தாலே போதும் | 33 |
| ஆசீர்வாதம் தருவாய் | 63 |
| ஆசைகொண்டேன் | 7 |
| ஆர்வத் தீயால் | 36 |
| ஆத்ம தரிசனம் | 33 |
| ஆனந்த நடனம் | 50 |
| ஆனந்தமே | 35 |
| ஆராய்ந்து பார் | 46 |
| இதயக் கதவைத் திற | 47 |
| இதய வெளியினிலே | 10 |
| இரவும் பகலுமுன் | 43 |
| இல்லையென்பான் யாரடா? | 9 |
| இன்றும் வரவில்லையே | 28 |
| உருகிடுவாய் மனமே | 25 |
| உனக்குச் சமானமாய் | 34 |
| உனையே காதலித்தேன் | 40 |
| உன்னைச் சரண் புகுந்தேன் | 65 |
| எங்கும் நிறைந்த பொருளே | 52 |
| எட்டி நிற்பதும் ஏனையா? | 15 |
| எந்தாய் வாழ்கவே | 57 |
| எத்தனை இன்பங்கள் | 63 |
| எப்போது வருவாயோ | 18 |
| எப்போது விடுதலையோ | 42 |
| எல்லாம் சிவன் செயல் | 30 |
| எழுந்திரு கல்யாணி | 49 |
| என்னுயிர்க் குயிராய் | 24 |
| ஒன்றும் கவலையில்லை | 52 |
| கண்ணெடுத்தாகிலும் | 16 |
| கண்ணாரக் கண்டு | 19 |
| கண்ணாலே | 37 |
| கருணாகரனே | 25 |
| கவலைப்படாதே மனமே | 38 |
| காடுமலை யெல்லாம் | 16 |
| காதலாகினேன் | 22 |
| குழலோசை | 20 |
| கொட்டம் அடங்கி | 31 |
| கொண்டி சொன்னதார்? | 15 |
| கோயில் உலகெல்லாம் | 54 |
| கோவிந்தராஜப் பெருமான் | 21 |
| சகலகலா வாணியே | 48 |
| சகல பாக்யமும் | 62 |

## பாட்டு முதற்குறிப்பு அட்டவணை


| பாட்டு | பக்கம் |
|---|---|
| சக்தியை வணங்கிடுவோம் | 53 |
| சத்திய ஜோதியை | 47 |
| சத்தியம் வெல்லும் | 65 |
| சாதனம் செய்யவாரீரே | 32 |
| சாந்தமாக வுன் | 11 |
| சாரதா தேவியே | 53 |
| சிதம்பரமென நினைவாய் | 9 |
| சித்த வுறுதி | 28 |
| சிவசக்தி ஜயகாளி | 58 |
| சிவசக்தி தாயே | 62 |
| சுதந்தரம் தாரும் ஐயே | 27 |
| ஞானப்பால் அருளாய் | 12 |
| தடதடவென ருத்ரசண்டி | 61 |
| தரிசனம் செய்திடுவோம் | 51 |
| தக்ஷனை யழித்தானே | 42 |
| தாயே சரணம் | 59 |
| தாயே சிவகாமி | 61 |
| தில்லை நடராஜனே | 68 |
| தூக்கிய திருவடி | 10 |
| தேவ ஜீவனம் | 44 |
| நடராஜா சரணம் | 5 |
| நம்பித்தான் இருக்கின்றேன் | 14 |
| நர்த்தனம் செய்யேனோ ? | 18 |
| நலமோங்கி வாழ்க | 71 |
| நல்லவர் திருக்கூட்டம் | 72 |
| நீயின்றி நானில்லை | 26 |
| நீயே எனது ஜீவன் | 26 |
| பக்தி மின்சாரம் | 12 |
| பண்ணுடன் பணியுடன் | 69 |
| பரதேவி ஜயபாரதி | 62 |
| பரமனைச் சிந்தைசெய் | 43 |
| பரமேசனை | 35 |
| பரிபூரணானந்தமே | 8 |
| பரிபூர்ண சுதந்தரம் | 56 |
| பாதம் பணிந்தேனே | 54 |
| பாரமெல்லாம் வைத்தேன் | 41 |
| புதுயுகம் வரவேண்டும் | 39 |
| பூரண ஞானி அவனே | 45 |
| பூரணனே | 23 |
| பெண்ணாசை மறந்து | 17 |
| போதும் போதும் | 69 |
| போற்றி செய்வோம் | 58 |
| மங்களமாய் வாழ்க | 70 |
| மாதங்கி சரணம் | 60 |
| மானிட ஜன்மம் | 44 |
| முன்னிலும் முன்னவன் | 67 |
| மோகன வலை | 30 |
| மோன நிசியினிலே | 8 |
| யாரும் இல்லையோ ? | 29 |
| வந்தே மாதரம் | 56 |
| வரமருள்வாய் | 27 |
| வரமெனக்கருள்வாய் | 64 |
| வருந்தருணம் இதுவே | 48 |
| வருவானோ வனக்குயிலே | 39 |
| வழிகாட்டி நடத்தினான் | 20 |
| வீரவுறுதி தருவாய் | 49 |
| வைத்தபடியே | 29 |
| ஸ்ரீரங்க ராஜா | 13 |
| ஜங்கார சுருதி | 6 |
| ஜயஜயஜய ஜயஹோ | 59 |
| ஜீவப் படகை ஓட்டும் | 68 |
| ஜெய ஜெய சுத்தசக்தி | 55 |